செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨00௭ புரட்டாசி, (Oct.'76) [பரல்-௨

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

திருமுருக கிருபானந்தவாரியார் (70 அகவை நிறைவு) முத்துவிழா

ஐம்பது ஆண்டுகட்கு மேலாகத் தமிழ்நாட்டிலும் வட நாட்டிலும், கடல் கடந்த நாடுகளிலும் சமயச் சொற்பொழிவாற்றிப் பெரும் புகழ்பெற்ற திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் முத்துவிழா சென்ற மாதம் கோவை கௌமார மடத்தில் மூன்று நாட்களும் 8—10—76 இல் முன்னுள் முதலமைச்சர் உயர்திரு, எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் சென்னை இராசேசுவரி திருமண மண்டபத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அவர்களது சொற்பொழிவுத் தொண்டினல் சில திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. கழகத்தின் சமய நூல்களின் விற்பனைக்கு ஒரளவு நல்ல பயன் ஏற்பட்டுள்ளது. இசையோடு உளங்கவரும் வகையில் சொற்பொழிவாற்றுவதில் அவர்கட்கு நிகர் அவர்களே. அவர்கள் நூருண்டு வாழ்ந்து மேலும் தொண்டு செய்வார்களாக!

———

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு உ00எ, புரட்டாசி	பரல்
ருக	அக்டோபர் 1976	உ

மறைமலையடிகள் நூல்நிலையத்தை மேலும் வளர்ப்பதெப்படி?

தமிழ் நூல்களை எல்லாம் அழிந்துபோக விடாமல் தேடித் தொகுத்து அழகுற அச்சிட்டுப் பரப்பும் பெருநோக்குடன் 1920 செப்டம்பர்த் திங்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் கூட்டுப்பங்கு நிறுவனமாகத் திருநெல்வேலியில் பதிவு செய்யப் பெற்றது. பதிப்புத் துறைக்கு இந்தியாவிலே இதுவே முதன் முதல் தொடங்கிய கூட்டுப்பங்கு நிறுவனமாகும். கழகம் புத்தகங்களை அச்சிட்டு விற்றுக் கிடைக்கப் பெறும் ஊதியத்திலே பேர்பாதி சைவசித்தாந்த சங்கம், தமிழ்ச் சங்கம் ஆகிய இரண்டு அற நிலையங்கட்கு வழங்கப் பெறுதல் வேண்டுமென்பது கழகத் தொடக்கத்திலேயே அதன் அடிப்படைக்கொள்கையாக அமைந் துள்ளது. அவ்விரண்டில் சைவசித்தாந்த சங்கமே 1924 ஆம் ஆண்டு முதல் திருநெல்வேலியில் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படும் வகையில் சிவஞான முனிவர் நூல்நிலையத்தை நடத்தி வருகின்றது. பழைய நூல்களைத் தேடித் தொகுத்தல், பேணிக் காத்தல், அவை ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படச் செய்தல் வேண்டுமென்ற குறிக்கோளே பதிப்பு நிறுவனம் நூல்நிலை யங்களை நிறுவக் கருதிய காரணமாகும். 1958 ஆகஃச்டில் சென்னையில் மறைமலையடிகள் தொகுத்து வைத்திருந்த 4000 நூல்களோடு கழகம் நாளடைவில் தொகுத்த 5000 நூல்களையும் சேர்த்து மறைமலையடிகள் நூலகம் திறக்கப்பெற்றது. அந் நூலகம் இயங்கும் மனை 1832 இல் வள்ளல் இராமலிங்க அடிகள் முதன்முதல் சொற்பொழிவு ஆற்றிய இடமாகும். அந் நூல்

நிலையம் நாளும் வளர்ந்து இன்று 36,000 நூல்களைக் கொண்ட தாக ஆராய்ச்சியாளர்கட்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றது.

மறைமலையடிகளார் பிறந்தது 1876 ஆம் ஆண்டாகும். என் தமையனாரும், கழகத்தை நிறுவியவருமான உழைப்பே உருவான திருவரங்கனார் அடிகளாரை முதன்முதல் இலங்கையில் கண்டது 1914 ஆம் ஆண்டாகும். இவ்விரண்டு காலங் கட்கும் இடையீடு 38 ஆண்டுகளாகும்.

கழகம் தோன்றியது 1920. மறைமலையடிகள் நூலகம் கழகவழி அமைக்கப் பெற்றது 1958. இவற்றிற்குள்ள இடையீடு 38 ஆண்டுகளாகும். இங்கே ஓர் ஒற்றுமை காணப் பெறுவது திருவருட்குறிப்பே.

என் அருமைத் தமையனார் கல்வியறிவோடு தொழில் நுட்பமும், செயல் திறமையும் உடையவர். அவர்கள் இலங்கையில் நெல்லையார் நடத்திவந்த மளிகை ஒன்றில் பணி செய்துவந்தபோது அடிகளார் நூல்களை வரவழைத்துப் படித்துச் சுவைத்து அவர்கள்பால் அளவிலா அன்புடையவ ரானார். பின்னர் திருவரங்கனார் அடிகளாரை இலங்கைக்கு அழைப்பித்துப் பெரும் பொருள் தொகுத்துக் கொடுத்ததோடு அவர்கள் நூல்களையும் மிகுதியாக விற்றுக் கொடுத்தனர். அது முதல் அடிகளுடைய திருத்தொண்டு வளர்வதற்கு அரங்கனார் தொடர்பு நறுநீராகவும் ஏற்ற உரமாகவும் விளங்கலாயிற்று.

அடிகளார் பல்லாவரத்தில் பொதுநிலைக் கழகமென்னும் மாளிகை கட்டுவதற்கும், தாம் எழுதிய நூல்களை அச்சிடுவதற்கு ஓர் அச்சகம் அமைப்பதற்கும் திருவரங்கனார் வேண்டும் பொருள் திரட்டி அனுப்பிவைத்தனர்.

இவ் விருவர்க்கும் ஏற்பட்ட இவ் வருட்பிணைப்பினாலேதான் திருவரங்கனாருக்கு அடிகளார் திருமகள் திருவாட்டி நீலாம்பிகையார் வாழ்க்கைத் துணைவியாரானார்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் நோக்கம் தமிழ் நூல்களை எல்லாம் அச்சிடுவதுமட்டுமல்லாமல் அவை யாண்டும் கிடைக்கப்பெறச் செய்வது என்பதுமாகும். அதனாலே சென்னையில் தலைமை நிலையத்தையும் நெல்லை, மதுரை, கோவை, குடந்தை, திருச்சி ஆகிய ஐந்து பேரூர்களில் கிளைகளையும் அமைத்துத் தமிழ் நூல்கள் யாவும் வேண்டுவார்க்கு எளிதிலே கிடைப்பதற்கு வழி செய்துள்ளது.

எல்லா நூல்களையும் எல்லாரும் வாங்கிப் படிப்பதற்கு இயலாதாகையால் அரிய நூல்களைக் கொண்ட நூல்நிலையங்களை

அமைத்துப் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்பது கழகத்தின் அடிப்படை நோக்கமாகும். எனவே நெல்லையில் சிவஞான முனிவர் நூல்நிலையமும், சென்னையில் மறைமலை யடிகள் நூலகமும், பல்லாவரத்தில் அடிகள் வாழ்ந்த இல்லத்தைத் தமிழகவரசு, நடுவணரசு பொருளுதவியுடன் வாங்கி அங்கொரு நூல் நிலையமும் அமைத்து நடத்தி வருகின்றது.

சென்னையில் அடிகளார் படித்த நூல்களிலெல்லாம் அடிக் கோடுகளும், ஓரக் குறிப்புக்களும் காணப்பெறும். இப்போது பலதுறை நூல்களைப் படிப்பதற்கு வரும் ஆய்வாளர்கட்கு அடி களார் எழுதியிருக்கும் குறிப்புக்கள் பெரும் பயன் தருகின்றன.

அடிகளார் தம் இறுதிக்காலம் வரை நாடோறும் நூல்களைப் படிப்பதிலே பேரார்வம் காட்டி வந்தனர் என்பது அவர்களுடைய நாட்குறிப்புக்களால் அறியக் கிடக்கின்றது. அதனால் அவர்கள் கலைக்களஞ்சியமாகவே விளங்கினார்கள். கழகம் இதுகாறும் நூல்நிலையங்களைப் புத்தகவிற்பனை வருவாயைக் கொண்டே நடத்திவந்தது. அரசு பாடநூல்களை வெளியிட்டது முதல் புத்தக விற்பனை குறைந்து விட்டமையாலும் நூல்படிக்கும் பழக்கமும் மக்களிடம் குறைந்து விட்டமையாலும் விற்பனை ஊதியமும் மிகவும் குறைந்துவிட்டது. எனவே தமிழக அரசு, நடுவணரசு இவற்றின் பொருளுதவி இல்லாமல் நூல்நிலையங்களை இனி நடத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டுத் தமிழக அரசுக்கும், நடுவணரசுக்கும் விண்ணப்பம் அனுப்பிவைத்தோம். நடுவணரசு 1973—74க்கு ரூ. 21,000மும் 1974—75க்கு ரூ. 3,000மும், 1975, 76க்கு ரூ. 7,000மும் வழங்கியுள்ளது. தமிழக அரசு 1974, 75க்குப் பொருளுதவி வழங்கவில்லை. ஆனால் 1975—76க்கு ரூ. 10,000 வழங்கியுள்ளது. ஆண்டுக் காண்டு வளர்ந்துவரும் மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு இவ்வளவு குறைந்த பொருளுதவி போதாது. பழம்பதிப்பு நூல்களைப் பாதுகாப் பதற்குத் தனியே வளிவரை, காப்புடைய அறை (Air Conditioned Room) ஒன்று கட்டாயம் வேண்டும். தூசகற்றும் மின் பொறி (Dust Cleaner) ஒன்றும், பழைய பதிப்பு நூல்களைப் படம் பிடித்துப் பாதுகாக்கும் கருவி (Micro Film) ஒன்றும் வேண்டப் பெறும். மேலும் மேலைநாடுகளிலே நூல்களைப் பாதுகாப் பதற்குக் கையாளப் பெறும் புதுமுறைகளையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

மறைமலையடிகள் நூல்நிலையத்தில் (எம்.ஏ., எம்.லிட்., பிஎச்டி. M.A., M.LIT., PhD) முதலிய பட்டங்கட்குப் பலதுறை

நூல்களை ஆராய்ச்சி செய்ய வருபவர்களும், சில தனித்துறைகளில் ஆராய்ச்சி செய்ய வருபவர்களும் மறைமலையடிகள் நூல் நிலையத்தைப் பெரிதும் போற்றி மகிழ்கின்றனர். நூல் நிலையத்தில் தமிழில் M.A. பட்டமும் நூலக இயலிலே இளநிலைப் பட்டமும் (B. Lib.) பெற்றுள்ள ஒருவர் நூலகராக இருக்கிறார். அவர் உள்ளன்போடும் திறமையோடும் உதவி புரிந்து வருவதை நூலாய வருபவர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். வெளி நாடுகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் வெவ்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்ய வருகின்றனர். செக் நாட்டிலிருந்து ஒருவர் கட்டபொம்மனைப் பற்றி ஆராய வந்தனர். அவர் தமக்கு வேண்டிய நூல்கள் அனைத்தும் இந்த நூல் நிலையத்தில் ஒருங்கே கிடைக்கப்பெற்றன என்று மகிழ்ந்து பாராட்டுரை வழங்கினர்.

பிரான்சு நாட்டிலிருந்து நூலகர் ஒருவர் தமிழில் அச்சுக்கலை வந்தகாலம் முதல் பதிப்பிக்கப் பெற்ற நூல்களைப் பார்க்க வேண்டுமென விரும்பினர். ஏறக்குறைய எல்லா நூல்களுமே இங்கு இருக்கக் கண்டு வியந்தனர். மற்றொருவர் முதன் முதல் அச்சிடப் பெற்ற அகர முதலியும் அதற்குப் பின் இந்நாள் வரை வெளியிடப் பெற்றுள்ள அகர முதலிகள், நிகண்டுகள் ஆகியவற்றையும் பார்க்க வேண்டுமென்று விரும்பினர். அவை யாவும் இந்த நூல்நிலையத்திலே போற்றி வைக்கப்பட்டிருப்பது கண்டு பெருமகிழ்வுற்றனர்.

முன்னாளில் பெருமக்கள் சிலர் நடத்திய பழைய இதழ்களை எல்லாம், இந் நூலகம் போற்றி வைத்திருப்பது ஆராய்ச்சியாளர் சிலர் உள்ளங்களைப் பெரிதும் கவருகின்றது. தமிழ்ப் புலவர்கட்கெல்லாம் ஒளி விளக்காக விளங்கி மறைந்த மறைமலையடிகளார் தமிழ்மக்கட்கு வழங்கிய அறிவுச் செல்வங்களை மேலும் போற்றி வளர்ப்பதற்குத் தமிழ் அறிஞர் பெருமக்கள் எவ்வாறெல்லாம் உதவி செய்யலாமென்பதைக் கீழே விவரிக்கின்றேன்.

1. பல துறைகளிலுள்ள அரிய நூல்கள், சுவடிகள், மலர்கள், பழைய இதழ்கள், புலவர் படங்கள், கலைப் பொருள்கள் ஆகியவற்றைத் தொகுத்துக் கொடுக்கலாம்.

2. தாம் வாழும் பகுதிகளில் வழங்கப் பெறும் பழமொழிகள், உவமைகள், மரபுத் தொடர்கள், நாட்டுப்பாடல்கள், தொழில் துறைகளில் வழங்கப் பெறும் சொற்கள், கைமுறை மருந்துகள் பற்றிய கருத்துரைகள் முதலியவற்றைத் தொகுத்து அனுப்பிவைக்கலாம்.

நூற்பதிப்புக் கழகத்திற்கு நேராகச் செய்யும் உதவி

1. தமிழ் ஆசிரியர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும், தமிழ் அறிஞர்களும், தமிழ் அன்பர்களும், தங்களுக்கோ, தாங்கள் பணிசெய்யும் பள்ளி கல்லூரிகட்கோ நூல்நிலையங்கட்கோ வேண்டப்பெறும் நூல்கள் அனைத்தையும் கழக நிலையங்களிலேயே வாங்க வேண்டுமென்று உறுதி செய்து கொள்ளுதல்.

2. யாருக்குப் பரிசு கொடுக்க வேண்டுமென்றாலும் கழகப் புத்தகங்களையே வாங்கிப் பரிசு கொடுத்தல்.

3. கழகம் 50 ஆண்டுகளாகக் குறிக்கோளோடு நடத்தி வரும் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் இதழைத் தமது பள்ளிக்கோ, கல்லூரிக்கோ வரவழைப்பதோடு தம் உடன் ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோரை ஆண்டுக்கட்டணம் கட்டச்செய்து உறுப்பினர்களாக்கியும் சிலரை வாழ்நாட் கட்டணம் கட்டுமாறு செய்தும் உதவுதல்.

நேராகவே நூல்நிலையத்துக்குச் செய்யும் பொருளுதவி

1. தாம் ஒவ்வொரு திங்களும் பெறும் சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையினை உண்டியில் போட்டு வைத்து ஆண்டுக்கு ஒரு முறையோ இரு முறையோ சேர்ந்துள்ள தொகையினை மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு நன்கொடையாக அனுப்பிவைக்கலாம்.

2. தமது வீட்டில் நடைபெறும் திருமணம், பிறந்தநாள் விழா, மணிவிழா, பவளவிழா முதலிய விழாக்களிலே செலவிடும் தொகையில் ஒரு பகுதியை மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு அன்பளிப்பாக அனுப்பலாம். தமிழகத்தின்கண் பெரிய தொழில் நிறுவனங்கள் அமைத்துள்ள அறக்கட்டளையிலிருந்து மறைமலையடிகள் நூல்நிலையத்துக்குக் கணிசமான தொகை வழங்கலாம்.

3. தாம் ஈட்டித் தொகுத்துள்ள சொத்துக்களைத் தம்முடைய கால் வழியினர்க்கு விருப்ப ஆவணம் (will) மூலம் எழுதிவைக்கப்பெறும் தொகையில் ஒரு பகுதியினை மறைமலையடிகள் நூல்நிலையத்துக்கென வழங்கலாம். இந்த முறையில் தமிழ் நன்மக்களே மறைமலையடிகள் நூல்நிலையத்தைத் தங்கள் கண்கள் போன்று பேணிக் காத்து வளர்த்து வருகின்றனர் என்று அனைத்துலக மக்கள் அறிந்து வியந்து மகிழ்தல் வேண்டுமென்பதே தமியேனின் நோக்கம்.

வ. சு.

சிவஞானபோத ஆராய்ச்சி

[தவத்திரு அழகரடிகள்]

(சிலம்பு ௫௧, பரல் ௧, பக்கம் ௧௮இன் தொடர்ச்சி)

சிவஞானபோத நூலின் அமைப்பைப்பற்றி முதலில் பார்த்துக் கொள்வோம்.

1

நூல் அமைப்பு

1. தருக்க முறை:

இது 'காண்டல்' என்றும், 'கருதல்' என்றும், 'உரை' என்றும், மூன்று வகையில் அடங்கும்; உயிர்கள் காட்சியளவை மட்டும் உடையன என்பது, உண்மையில் இயற்கை அன்று. அவர்களுக்கு ஓரளவு கருதும் சிந்தனையும் உண்டு. காட்சி யளவையாகக் கண்டு, கருதல் அளவையால் ஓரளவாவது சிந்தித்தும் பார்ப்பவர்களே, தாம் அறிந்த வரையில் பழக்கத்தில் அவற்றை உணர்ந்து உரையளவை யாகும்படி பிறர்க்கும் உரைப்பவராய் இருக்கின்றனர்! இதனால் உரையளவையும அவர்களுக்கு உண்டு என்று தெரிகிறது;

சிலர்க்குத் தெரிந்தது பலர்க்குத் தெரிவதில்லை. அச் சிலர், தாம் பழக்கத்தில் உணர்ந்தபோது உரையளவையாக வெளியிடுவார்கள். அம்முறையில் தெரியாதவற்றைப் பலர் தெரிந்து கொள்வார்கள். ஆதலால், உரையளவை என்பது, காட்சியளவையாற் காணப்படும் உலகத்தைக், கருதல் அளவையால் சிந்தித்துப் பார்ப்பதனால் அமைந்ததே தவிர, வேறில்லை.

மூன்று அளவையாகிய இத் தருக்கங்களால், ஒன்றைத் துணிவதற்கு எல்லார்க்கும் வாய்ப்பு நேர்கின்றது. நேரிற் காண்பதனாலும் பொருள்களைத் துணிந்து கொள்ளலாம்; கண்டு அதனைத் தொடர்ந்து சிந்திப்பதனாலும் காணாததைக் கூடத் துணிந்து கொள்ளலாம்; சிந்தித்துச், சிந்தனைக்கு எட்டாத செய்திகளையும், கண்ட வரையில் அல்லது சிந்தித்த வரையில் பழக்கம் கொள்வதனாலும் துணிந்துகொள்ளலாம்.

காட்சியளவை மிகுந்தவர்களைக், 'காண்டல் அளவை' உடையவர்கள் என்கிறோம்; அதனோடு, கருதல் மிகுதியாக உடையவர்களைக் 'கருதலளவை' உடையவர்கள் என்கிறோம்

அப்படியே, அவ்விரண்டோடு, உரை, யாரிடம் மிகுதியாகத் தெரிகிறதோ, அவர்களை 'உரை யளவையாளர்' என்று போற்றுகிறோம்; அவர்களெல்லாரும் நூல் எழுதுகிறவர்கள்; நேர்முகமாக அருளொளியுடன் அருளுரை தருபவர்களு மாவார்கள்;

2. சமயங்கள் :

புறப்புறச் சமயத்தில் உலகாயதர், நால்வகைப் புத்தர், இருவகைச் சமணர் என முதல் அறுவகையார் கூறப்படு கின்றனர். இவர்களுக்குக் கடவுள் இணக்கம் இல்லை; மறை யாகமங்களை இவர்கள் ஒப்புக் கொள்வதில்லை; காட்சியளவையி லிருந்து சிறிது சிறிதாகச் சிந்தனை செய்யக்கூடியவர்கள்!

புறச் சமயத்தில் இருவகைத் தார்க்கிகர், இருவகை மீமாம்சகர், மூவகை ஏகான்மவாதியர், சாங்கியர், யோகர், பாஞ்சராத்திரியர் என்று வேறு ஆறுவகையார் அடங்குவர். இவர்களும் முதற்கடவுட் கொள்கை இல்லாதவர்கள்; இவரிற் சிலர், எதை எதையோ கடவுளாகக் கருதுகிறவர்கள்; ஓரளவு சிந்தனை உயர்ந்தும் மெய் அறியாதவர்கள்! இவர்கள், மறை களை ஒப்புக்கொண்டு ஆகமங்களிற் கருத்தில்லாதவர்கள் !

அகப்புறச் சமயங்களில் பாசுபதர், மாவிரதர், காபாலர், வாமர், வைரவர், ஐக்கவாதியர், ஆறு பேர் உண்டு. இவர்கள் மறை ஆகமம் இரண்டையும் கடவுளையும் ஒப்புக்கொண்டாலும், பெரும்பாலும் உருவ வழிபாட்டில் ஈடுபட்டு, நோன்புகள், சடங்குகள், அவற்றால் நடத்தை வேறுபாடுகள் உடையவர்கள்; துவைதிகள் !

கடவுள் உருவமாயும், அரு உருவமாயும், அருவமாயும், அவை கடந்தவராயும் இருப்பவர் என்பதைச் சிந்தித்து அறியா தவர்கள். உருவம், அரு உருவம், அருவம் என்னும் மூன்றும், உருவ பேதங்கள்; இவற்றிற்கு அப்பாற்பட்டவர் கடவுள்!

அகச்சமயம் ஆறில், பாடாண வாதியர், பேத வாதியர், சிவசம வாதியர், சிவ சங்கிராந்த வாதியர், ஈசுர அவிகார வாதியர், சிவாத்துவித வாதியர் என ஆறு வகையார் கருதப் படுவர். இவர்கள இரண்டற்ற நிலையிற் கடவுளைக் கலக்கும் அத்துவிதிகளே; ஆயினும், தக்க அத்துவிதிகள் அல்லர். கடவுளை அடைந்து பேரின்பம் உறுதலில் பல வகையான கொள்கை உடையவர்கள்!

பாடாண வாதியர், வீடு பேற்றில், உணர்ச்சியின்றி உயிர் கல்லைப்போல் கிடக்கும் என்று கருதுவோர்.

பேத வாதியர், விடுபேற்றில் கலந்த நிலையிலும், சொல்லும் பொருளும் போலக் கடவுள் வேறு, உயிர் வேருய்ப் பேதப்பட்டு உயிரென்று தனியாய்க் குறிக்கும் வகையில், சிந்திப்பவர்கள்! 'விசிட்டாத்துவிதிகள்' போன்றவர்கள்! கிறித்துவர், முகமதியர் போன்ருரும் ஒவ்வொரு வகையில் இவருள் அடங்குவர்.

சிவசம வாதியர், விடுபேற்றில் உயிர்கள் சிவத்துக்குச் சமமாய்ச் சிவமாகி, அதன் ஐந்தொழில் முதலியவற்றையும் செய்துகொண்டு, சிவமாகவே இருப்பன என்பார்கள்.

சிவசங்கிராந்த வாதியர், ஆன்ம உணர்வில் சித்தின் இயல்புகளெல்லாம் தொகுப்புப் பெற்று (சங்கிரமம் பெற்று) அதனுல் பல வகையான 'சித்தி'களை அவர்கள் செய்து கொண்டிருப்பர் என்பவர்கள்.

ஈசுர அவிகார வாதியர், விடுபேற்றில் முதல்வனைக் கூடிவிட்டால், அதன்பின் அம் முதல்வனுல் ஏதோர் உதவியும் உயிர்களுக்குத் தேவையில்லை என்று கூறுவோர். திரிவு உருதவராய் (அவிகாரமாய்க்) கடவுளைப் போல் ஆன்மாக்கள் இருக்கும் என்பது இவர்கள் கருத்து.

சிவாத்துவித வாதியர், விடுபேற்றில் உயிர்களுக்குத் தனி உணர்வில்லை; சிவமே உணர்கிறது என்பர். இதுதான் 'அத்துவிதம்' என்பது இவர்கள் நினைவு.

இந்த 24 சிந்தனையாளர்களுக்கும், சித்தாந்த சைவர் என்னும் மெய்கண்டார், அவரவர் சிந்தனைக்கு ஏற்ற விளக்கங்கள் கூறிச் சிவஞானபோதத்தில் அதன் முதல் நூற்பாவிலும் பிற நூற்பாக்களிலும் சுருக்க விளக்கமாகக் கருத்துக்கள் தெளிவிப்பார்.

சிந்திப்பவர்கள், இப்படிப் பலவாருய்ச் சிந்தித்தனர்! சிந்திப்பது நல்லதுதான்; அந்த அந்த நிலையில் முடிவு செய்துவிட்டதுதான் குறையாய்விட்டது. மேலுஞ், சிந்தனை வளர்ந்தது: சைவசித்தாந்த உண்மைகளுக்குமேல், யார்க்கும் இன்றுவரையிற் சிந்தனை ஓடாமையால், இதுதான் இயற்கையை உணர்த்தும் முடிவுபோலும் என்று துணிய நேர்ந்துவிட்டது; இதற்கு மேலும் சிந்தனை நேர்ந்தால், அப்படி நேரும் வரையில், இதனை வாழ்க்கையிற் கொண்டுவரலாம்; பின்பு சிந்தனைக்கேற்றபடி, மேலும் வாழ்க்கை செய்யலாம்.

நூற்பாவின் கருத்துக்களை நன்ருய் விளக்குவதற்காக, மெய்கண்டதேவர், அவற்றின் கருத்துக்கள் இன்னின்னவை என்று அங்கங்கும் முதலில் தெளிவுபடுத்திக் கொள்கிருர்.

மேற்கோள்கள், ஏதுக்கள் எடுத்துக்காட்டுகளுடன் மேன்மேல் விளக்கங்கள் செய்கிறார். அவற்றையெல்லாம் நாம் தெளிவாகப் பார்க்கவேண்டும்.

3. நூலின் முறைமை:

இந்த முறைகளையெல்லாம் கருதிப் பார்த்தால், சிந்தனையாளர்களின் தடைகளை விளக்கி அவர்கள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் விடைகள் சொல்லுவதைச் சிவஞானபோதம், கடமையாகக் கொண்டிருக்கிறது என்பது தெரியும். இந்த நோக்கத்தையும் போக்கையும் தழுவியே, அதற்குச் சிவஞான முனிவர் உரை வகுக்கிறார். இவ் வியல்பினை அறியாமல், நூற்பாவுக்கும் மற்றவற்றிற்கும் வேறு வேறு வகையில் பொருளுரைத்துப் பார்ப்பதும் உண்டு.

எடுத்துக் காட்டாக:

ஒன்றிரண்டு கூறலாம். நூற்பாவில், ''தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்'' என்னும் வரிக்குத், 'தோற்றுவிக்கப் பட்ட இருப்பின்படியே மறைந்து மாயை மலத்தில் தங்குவதாகும்' என்று ஒரு வகை உரை கூறுவதும் உண்டு.

சிவஞான முனிவர், 'திதி' என்பதைத் 'திதிப்பொருள்' எனவும், 'ஒடுங்கி' என்பதை 'ஒடுக்குங் கடவுள்' எனவும், 'மலம்' என்பதை 'ஆணவ மலம்' எனவும், 'உளது' என்பதை 'மீண்டும் தோன்றுவது' எனவும், உளது என்பதன் வினை முதலாக வரும் 'அவை' என்பதை, வினைச் சொல்லின் ஒருமைக் கேற்றபடி, உலகத் தொகுதி எனவும் உரைப்பார். இவ்வாறு உரை கொள்வது, சற்று வலிந்து பொருள் சொல்லுவது போலத் தோன்றும்; ஆயினும், அது, மெய்கண்டார் கருத்துப் போக்கைத் தழுவியதாகும்.

எவ்வாறு?

''பூதாதி ஈறும் முதலும்'' என்னும் எடுத்துக்காட்டு வெண்பாவில், ''பேதாய் திதி ஆகும்'' என்று ஒரு தொடர் வருகிறது. 'திதி ஆகும்' என்று நூலாசிரியரே முடித்துவிடுகிறார்; அவர் கருத்துக்கு ஏற்றபடியே சிவஞான முனிவர், நூற்பாவில் வரும் 'திதி' என்பதற்குத் 'திதிப் பொருளே' என்று முடித்து உரை வகுத்துச் செல்கிறார்.

மற்றொன்று:

மேலும், இவ் வெண்பாவில் வரும் 'பூதாதி' என்னும் சொல்லுக்குப் 'பூதம் முதலியவை' என்று பொருளுரைப்பது

பொருந்தாது என்பார் முனிவர்; காரணம், 'பேதாய்' என ஒரு சாராரை நூலாசிரியர் விளித்திருக்கிருர். அவ்வொரு சாரார் 'உலகாயதர்' 'மீமாம்சகர்' முதலியோர்; 'உலகம் மண் முதல் நான்கு தத்துவங்களால் ஆனது' என்பது அவர்கள் கோட்பாடு; அந் நான்கு தத்துவங்களுக்கு மேல் வேறு தத்துவங்களை அவர்கள் கொள்ளாதவர்கள்.

அவர்களை நினைத்து, விடையாக இவ் வெண்பா விளக்கிச் செய்யப்படுகின்றது இந்த வெண்பாவில் வரும் 'பேதாய்' என்பதனுல் இது தெரிகிறது; 'நிலம், நீர், தீ, காற்று' என்னும் நான்கு பூதப் பொருள்களுக்குமேல் எந்தத் தத்துவத்தையும் அவர்கள் ஒப்புக்கொள்ள வில்லை யாதலால், 'பூதாதி' என் பதற்குப் பூதம் 'முதலியவை' என்று பொருளிருக்கக்கூடாது; அது, அவர்கள் கருத்துக்கு ஒவ்வாது; "உலகத்துக்குப் பூதப் பொருள்கள் 'முதற் காரணம்' என்று கூறுவது பொருந்தும்" என்று இங்ஙனம், சிவஞான முனிவர் உரை தெரிவிப்பார்.

ஆதலால், சிவஞான போதத்திலுள்ள நூற்பாக்களும், கருத்தும், மேற்கோளும், ஏதுவும், எடுததுச்காட்டுகளும், சிந்தனையாளர்க்கு விளக்கங் கூறி மேன்மேலும் உண்மைகளை வகுத்துச் செல்லுவனவாக இருக்கின்றன; 'பேதாய்' என்று ஒரு சாராரை விளித்து விடை சொல்லுவதாக இவ் வெண்பா அமைந்திருத்தலால், இங்ஙனம் நூலின் நடையொழுங்கு இன்னதென்று தெரிகிறது.

4. வார்த்திகப் பொழிப்பு:

மெய்கண்டார் கூறிய 'வார்த்திகப் பொழிப்பு' என்பது என்ன என்பதையும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். இது, கருத்துக்களும், மேற்கோள்களும், ஏதுக்களும் சேர்ந்தது.

இப் பொழிப்பு, நூற்பாவின் வார்த்தைகளைத் தழுவிச் செல்லுவது; வார்த்தைகள் 'பதங்கள்' எனப்படும். பதங்களைப் பிரித்துக், கருத்துக் கேற்றபடி அமைத்துப், பதப் பொருள் தழுவி, உரையைத் திரட்டிச் சொல்லுவதனுல், இது 'வார்த் திகம்' எனப்பட்டது. கருத்துக்களை வார்த்தைகளிற் பொழி வதனுல், 'பொழிப்பு' எனவும் வந்தது. கருத்து விளக்கங்களை யும் உள்ளுறையையும் முக்கியமாக உரைத்துக் கொண்டு செல்வது 'வார்த்திகப் பொழிப்பு'.

வார்த்தை, பதம், சொல் என்பனவெல்லாம் ஒன்றுதாம். சொற்களின் வாயிலாகக் கருத்துக்கள் வார்க்கப்பட்டு மற்றொரு சொல்லோடு சேர்ந்து நீள ஒழுகுதலால், வார்த்தை' என்று வழக்கில் வந்தது.

ஒரு சொல்லுக்குப் பல கருத்துக்கள் இருக்கும்; அந்தந்தப் பக்குவத்துக்கும், நேரத்துக்கும் ஏற்றபடி பதப்பட்டு வருதலால், 'பதம்' என்னும் சொல்லும் அமைந்தது; ஒலி கொண்டு வாய் மொழியாகச் சொல்லுவதனுல், 'சொல்' எனப்பட்டது.

வார்த்தைகள் தோறும் ஒழுகி வரும் கருத்தைத் திரட்டு தலால், 'வார்த்திகப் பொழிப்பு' என்பது பெயராயிற்று.

பதங்களின் உள்ளுறை கருதாமல் மொத்தமாகப் பதப் பொருளைத் திரட்டித் தருவது, 'பிண்டப் பொழிப்பு' எனப்படும். பதங்களின் கருத்தறிந்து பொருள் திரட்டிக்கொண்டு, வார்த்திகப் பொழிப்பு வருதலின், 'பிண்டப் பொழிப்பை' எளிதாக உரைத்துக்கொள்ளலாம்; ஆதலின், 'இதன் பொழிப்பு உரைத்துக் கொள்க' என்று ஆசிரியர் கூறிவிட்டார்; இதில் பொழிப்பு என்று மட்டும் வருதலால், 'பிண்டப் பொழிப்பு' என்று நாம் கொள்ள வேண்டும்; ஏனென்ருல், 'வார்த்திகப் பொழிப்பை' ஆசிரியர் கூறுகின்ருராதலின்.

சிவஞான போதத்துக்கு மெய்கண்ட தேவர் 'வார்த்திகப் பொழிப்பு' உரைத்ததனுல், அவர் கூற்றுக்கள், நூற்பாவின் சொற்களைத் தழுவி, நன்கு கவ்வியே செல்லுகின்றது என்பது தெளிவாகும். இக் காரணத்தால், சிவஞான போத நூற்பாவின் ஒவ்வொரு சொல்லும், அறிவுக்கு விருந்தாய், ஆராய்ச்சிக்கு அமைந்தனவாய்ச், சிந்தனையாளர்களுக்கு ஏற்றபடி, நுண்ணிய கருத்துக்கள் பொருந்தி, ஆழ்ந்து ஆழ்ந்து சுவைத்துச் சுவைத்துப் பார்க்க வேண்டியவையாய் இருக்கின்றன என்று தெரிகின்றது. அதற்கேற்றபடியே, அவர், வார்த்திகங்கள், கருத்து முதலியனவாக மேன்மேல் விளக்கப்படுகின்றன; அதோடு ஏற்ற எடுத்துக்காட்டுச் செய்யுட்களாலும் கருத்துக்கள் தெளிவிக்கப்படுகின்றன.

ஆதலால், சிவஞான போதத்தை நன்கு பயிற்சி செய் கிறவர்கள், உலகச் சிந்தனைகளையெல்லாம் உள்ளடக்கிய பெருஞ் சிந்தனையாளராக அறிவு அகன்று, ஆராய்ச்சி மிகுந்து விளங்குவர் என்பதுந் தெரிந்துகொள்ளலாம்.

2

முதல் நூற்பா மூன்று பிரிவு உடையது. முதல் பிரிவு; 'அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்' என்பது, இரண்டாவது, தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்; மூன்ருவது 'அந்தம் ஆதி'.

'என்மனார் புலவர்' என்றது, இம் மூன்றும் முன் வழக்கே என்பதைக் காட்டுகிறது.

1. அவன் அவள் அது என்னும் உலகத்தொகுதி முத்தொழி லுடையது; 2. தொழிலுடைமையால் ஒருவனால் தோற்றப் பட்டது; தோற்றப் பட்டதாதலின் உலகம் தன் மூலப் பொரு ளாகிய மாயையின் உள்பொருளே; வினை காரணமாக எல்லாம், முடிவான பேரூழியில் ஒடுங்கி, இறுதி செய்யும் ஒடுங்கியாகிய அக் கடவுளிடத்திலிருந்தே மீண்டும் தோன்றும்; மீண்டும் தோன்றிவருதற்குக் காரணம், உயிர்களுக்கு ஆணவ மலப்பற்று இன்னும் நீங்காமையே; அது நீங்கும் பக்குவத்தை அடையும் வரையில், இங்ஙனம் தோன்றியும் இருந்தும் மறைந்துகொண் டுந்தான் இருக்கும். 3. ஆதலால், ஒடுக்குதற்கு ஆற்றல் வாய்ந்த ஒடுக்குங் கடவுளே, தோற்றுவிக்கும் முதற் கடவுளு மாவார்! இது, அப் பிரிவுகளின் கருத்து! முதல் பிரிவைப் பார்ப்போம்.

1. அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்:

'அவன்' என்பது, ஓர் ஆணின் உயிரையும் அவன் உடம் பையும் குறிக்கும்; 'அவள்' ஒரு பெண்ணின் உயிரையும், அவள் உடம்பையும் உணர்த்தும்; 'அது', இவ்வுடம்புகள் அல்லாத நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பொருள்களையும் அவற்றின் திரிவுகளாய்க் காணப்படும் பொருள்களுமாகிய உலகத்தைச் சுட்டும். 'எனும்' என்பது, 'என்று பலவாய், சுட்டாய், சடமாய் வழங்கப்படுகின்ற' எனப் பொருளாகும். 'அவை' அவ்வுறுப்புக்களாகிய உலகத் தொகுதி; 'மூவினை மையின்', முத்தொழில் உடைமையால் என்னும் பொருட்டு.

இங்ஙனம் அத் தொடர் பொருள்படும். சிவஞான போதத்தின் முதல் நூற்பாவிற்கூடச் சமயச் சிந்தனையாளரின் கொள்கைச் சிக்கல்கள் ஒருவகையில் தீர்வாகின்றன. மற்ற நூற்பாக்களிலும் அச் சிக்கலின் பலவேறு வகைகள் தீர்வு செய்யப்படும்.

உலகத் தொகுதி முத்தொழில் உடையது என்பது இம் முதற் பிரிவில் அறிவிக்கப்படுகிறது. தோற்றம், இருப்பு, இறுதி என்னும் இம் முத்தொழில்களையும் உலகத் தொகுதி பெறுவதற்கு மூன்று காரணங்கள் இங்கே காணப்படுகின்றன.

முதற் காரணம்: உலகம் உறுப்புக்களோடு கூடியது:

அவன் அவள் அது என்று உறுப்புக்களாக உலகத் தொகுதி பாகுபடுகின்றது. அவை ஒவ்வொன்றும் மேலும் பலவாகக் காணப்படுகின்றன.

ஒரு பொருள் இப்படி உறுப்புக்கள் பலவானுல், அவற்றைச் சேர்த்து முழுமையாகத் தோற்றுவிக்கும் தொழில் அப்பொருளில் உண்டாகிறது. அப்படி உண்டாகிறது என்பதை உணர்த்தவே, 'மூவினையின்' என்னுமல், 'மூவினைமை'யின் எனப்பட்டது; மூலப்பொருளாகிய நுண்ணிய 'மாயை', ஒரு காலத்தில் இங்ஙனம் தொழில் பெறுகிறது, பருப்பொருளாகிறுது என்பது கருத்து. தோன்றிய பின், பருப்பொருள்கள், சில காலம் இருக்கின்றன; பின்பு அழிந்து போகின்றன. இங்ஙனம் முத்தொழிலே உலகம் அடைவதற்கு, அது பல உறுப்புக்களாய்ப் பிரிந்திருப்பது ஒரு காரணமாகின்றது.

இரண்டாவது காரணம்: உலகம் பல கூறுகளாய்ப் பிரிவு பட்டு, அதனுல் அவைகள் சுட்டியறியப்படுகின்றன.

உலக உறுப்புக்கள், சிற்றறிவு உடைய உயிர்களாகவும், அறிவே இல்லாத உடம்புகளாகவும், பொருள்களாகவும் பலவாகி வரம்பு பட்டுக் குறித்தறியும்படி இருக்கின்றன.

உயிர்கள், மல மறைப்பினுல் தம் அறிவு தடைப்பட்டுப் பின்னும், சிற்றறிவு உடையனவாய் ஆவதோடு, தம் விரவல் குன்றி அணுவாகவும் வரம்புபட்டு விடுகின்றன. அறிவில்லாத பொருள்களும் வரம்புபட்டு, ஒவ்வொரு 'தத்துவமாய்' அதன் பிரிவுகளாய்க் காணப்படுகின்றன. அதனுல் உயிருள்ளவை உயிரில்லாதவை ஆகிய இரண்டும் சுட்டியறியும்படி சிறுமைப் படுகின்றன.

'சிற்றறிவு' என்பது 'சுட்டறிவு' எனப்படும்; சுட்டறிவு என்பது, குறித்து அறியும் அறிவு. மற்ற உயிர்களை இங்ஙனம் குறித்தறிவதோடு உயிரில்லாப் பொருள்களையும் உயிர் குறித்தறிகிறது.

சுட்டியறியும் இவ்வுண்மை தெரிவதற்காகவே, 'அவன், அவள், அது, அவை' என்னும் சொற்களெல்லாம் 'அ' என்னும் சுட்டெழுத்துடன் சேர்ந்து வருகின்றன.

மூன்ருவது காரணம்: உலகத்தின் பிரிவுகள் சடமாயிருக்கின்றன.

அவன் உடம்பும், அவள் உடம்பும், அது என்னும் உலகமுமாகிய, 'அவை' என்னும் உலகத் தொகுதி எல்லாம், 'அறியாமைச் சடப்பொருள்கள்' என்பது வெளிப்படை.

சடப்பொருளாய் இருப்பதனுல் அவற்றில் முத் தொழில்கள் நிகழ்கின்றன. சடப்பொருள் என்பவை அறியாமைப்

பொருள்கள்; அவற்றை இயக்க அறிவுப் பொருள் வேண்டும்; தாமே அசையா. பேரறிவுப் பொருள் ஒன்று இயக்க, முத்தொழில் நிகழ்கின்றது.

இங்ஙனம் முத் தொழில் புரிவதற்குச் சடம் என்பது ஒரு காரணமாய் இருப்பதனால், அவன் என்பதும், அவள் என்பதும் முறையே அவன் உடம்பாகிய சடத்தையும், அவள் உடம்பாகிய சடத்தையும் குறிக்கின்றன.

அதோடு, 'அவன்' 'அவள்' என்பதனால், ஆண் உயிரும் பெண் உயிரும் நினைக்கப்படும். அல்லாவிட்டால், 'நிலம், நீர், தீ, காற்று, வானம் என்னும் உறுப்புக்களையுடைய உலகம்' என்று மட்டும் குறிக்க 'அது' என்னும் சொல்லே போதும்.

ஆண் பெண் இருவகை உறுப்புக்களின் உடம்புகளும், பற்பல உலகப் பொருள்களைப் போல, வேறு வேறு தோற்ற முடையன. ஆயினும், அவற்றை ஒன்ருகவே 'சடம்' என்று சொல்லிவிடலாம். பல பொருள்களையும் உள்ளடக்கி, 'அது' என்றும், 'அவை' என்றும், அஃறிணைச் சொற்களே வந்துள்ளன.

அப்படியிருந்தும், 'அவன்' 'அவள்' என்று ஆசிரியர் வேறு படுத்திக் கூறியிருப்பதனால், இங்கே, 'ஆண்' என்றும் 'பெண்' என்றும் உயிர்களை எண்ணுவதற்கும் இடமாய் விட்டது.

அப்படி உயிர்கள் குறிக்கப்பட்டால், அவ்வுயிர்கள் 'சடம் ஆகாதே' என்று தோற்றும்; அறியாமை வயப்பட்டுச் சிற்றறிவு உடையனவாய், உலகத்தின் உறுப்புக்களாய்ப், பலவாய்ச், சுட்டி அறியத்தக்கனவாய், உயிர்கள் அணுநிலைப்பட்டுவிட்டன; அத்தகைய சிற்றறிவு உயிர்களும், அதனல், 'சடம்' போலவே கருதப்பட்டன.

ஆணவம், வினை, மாயை என்னும் பாசங்களோடு சேர்ந்து அவற்றின் சடத்தன்மையை அடைவதனல் 'அசித்து' என்றும், விளக்கமில்லாததனல் 'அசத்து' என்றும் உயிர்கள் சிற்சில இடங்களிற் குறிக்கப்படுதலை இங்கு நினைவுகூரலாம். ஆயினும், இயற்கையில் அவை சிறிதேனும் அறிவு உள்ளனவாய்ச் 'சித்'தின் வகையைச் சேர்ந்தனவாகவும் அறிவனவாகவும், விளக்கமுடையனவாய்ச் 'சத்'தின் வகையைச் சேர்ந்தனவாகவும் அறிவனவாகவும் இருத்தலால், இங்ஙனம் இரண்டு வகையையும் சார்ந்து இரண்டு வகையான தன்மைகளை அடைகின்ற, அறிகின்ற காரணத்தால், 'சித் சித்' தென்றும், 'சதசத்' தென்றும், 'இரண்டலா ஆன்மா' என்றும் அவை பெயர் பெறுகின்றன.

இப்படி ஆன்மாக்களின் நிலையைச் சடமாகவும் கருத நேர்ந்துவிட்டது. ஆதலால், உயிர்களும் உடம்புகளோடு கூடி முத் தொழிற்படுகின்றன. அழியாத உயிர்கள், மல மறைப் பினுல் அறிவு அறியாமையாகி அணுத் தன்மையை யடைந்தாற் போல, அழியாத மாயையும் இறையருளால் உடல், கருவி, உல கம் என்னும் பொருள்களாக விரிவடைந்து தோன்றுகின்றன.

உலகத்தின் இருப்பு நேரில் தெரிகின்றது; சில காலம் பொறுத்து அழிதலையும் பார்க்கிறோம்; ஆதலால் அது ஒரு காலத்தில் தோன்றியிருக்க வேண்டும் என்பதையும் இது கொண்டு அறியலாம்.

> ''பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்
> தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்''

என்பது கோயில் திருவகவல் (6—7); இவை காட்சியளவைக்கே தெரியும். தோற்றமும் ஈறும் என்னும் இரு தொழிலும் தொடர்பாகவே, 'இருத்தல்' தொழில் எப் பொருட்கும் இயல் கின்றது.

இவ்வுண்மையைச் சொன்னவுடனே 'உலகாயதர்', 'மீமாம்சகர்' முதலியோர் உலகத்தில் சிலவற்றிற்கு முத்தொழில் உள்ளன என்பதை ஒப்புக்கொண்டாலும், உலகம் முழுதும் அழிதல் நமக்குத் தெரியவில்லையே யென்று ஒரு தடையை எழுப்புகின்றனர்.

அதற்குமெய்கண்டதேவர் ''உலகில் ஓரினமாக உள்ளவை ஒரு காலத்தில்தோன்றுதலும், சில காலம் இருந்தபின் ஒன்றாய் அழிதலும் பார்க்கின்றோம்; அப்படித்தான் உலக மொத்தமும் 'சடம்' என்னும் ஓரினமாதலின், எப்போதாவது ஒரு காலத்தில் ஒருங்கே அழியும் என்று சிந்தித்துத் தெளிந்து சொல்வர் பெரியோர். இதைக் கூடவா சிந்தித்தல் கூடாது'' என்று இரக்கத்தோடு விளக்கிக் கூறுகின்றார்.

இதற்கு ஒரு விளக்கச் செய்யுள் சிவஞான போதத்தில் வருகிறது.

> ''பூதாதி ஈறும் முதலும் துணையாகப்
> பேதாய்! திதியாகும்; பெற்றிமையின்—ஓதாரோ
> ஒன்றொன்றில் தோன்றி உளதாய் இறக்கண்டும்
> அன்றுஎன்றும் உண்டென்ன ஆய்ந்து''

பூதாதி—பூதாதிக்கு; உலகத்துக்கு; ஈறும் முதலும் துணையாக இருத்தலாகிய திதி ஆகின்றது; பெற்றிமையின்—ஒரே இன

மென்னுந் தன்மையால்; ஒன்று ஒன்றில்—ஒவ்வொரு காலத்தில்; இறக்கண்டும்—இறுதியாதலைப் பார்த்தும்; அன்று—அன்ருெரு காலம்; முற்றும் அழியும் ஒரு காலம். ஆய்ந்து ஓதாரோ — சிந்தித்துச் சொல்ல மாட்டார்களா? சொல்லுவார்கள் என்றபடி.

2. தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம் :

இது இரண்டாவது பிரிவு. 'தோற்றிய' என்பது பிறவினையில் வந்தது. 'தோற்றப்பட்டதாய' என்பது பொருள். உலகம் தோற்றப்பட்டது என்பதனுல் அதனை ஒருவன் தோற்றியிருக்க வேண்டும் என்று இப் பிறவினையினுல் தெரிகிறது. தன்வினையில் வந்திருந்தால், 'தோன்றிய திதியே' என்று வந்திருக்கும்; தானே தோன்றியது என்றும் பொருளாகும். 'தோற்றிய திதியே' என்பதற்குத் 'தோற்றப்பட்டதாய உள் பொருளே' என்பது பொருள்.

'உள் பொருளே' என்று ஏகாரம் கொடுத்து ஆசிரியர் தெளிவுபடுத்தியிருக்கிருர். சொல்லோடு அடுத்த சொல்லும் பொருளும் இயைபு படவில்லை; 'உள்ளதே தவிர இல்லாதது இல்லை'. என்று மற்ருெரு கருத்தின் இயைபையும் அந்த ஏகாரம் பிரித்து உணர்த்துகிறது. இங்ஙனம் இயைபில்லாததை நீக்குவதும், மற்ருென்றின் இயைபை நீக்குவதுமாகப், பிரிக்கும் நிலை உடையதாய், இப் பிரிநிலை ஏகாரம் இருக்கிறது.

'ஒடுங்கி' என்னும் சொல், உலகம் ஒடுங்குவதற்கு நிமித்த காரணமாய் இருக்கும் முதற் கடவுளை உணர்த்தியது. 'ஒடுங்கி' என்பது பெயர். 'ஒடுங்கியிலிருந்து' என்று உருபு விரித்துக் கொள்ளவேண்டும்.

'மலத்து' என்பது 'மலத்தால்' என்னும் பொருட்டு; 'ஆல்' என்னும் உருபும் இதற்கு வருவித்துக்கொள்ள வேண்டும். 'மலங் காரணமாக' என்பது பொருள். அப்படிச் சொல்வதனுல், 'அறியாமை காரணமாக' என்று கருத்தாகிறது. அறியாமை தரும் மலத்தை 'ஆணவ மலம்' என்று சொல்வார்கள். ஆகவே இங்கு 'மலம்' என்பது 'ஆணவத்தைக்' குறிக்கிறது.

'உளதாம்' என்பது 'உள்ளதாம்' என்பதற்காக வந்தது. 'மீண்டும் பிறப்பு உள்ளதாம்' என்பது கருத்து. 'மீளத் தோன்றுவதாம்' என்று உரைகாரர் கூறுவார். 'ஆணவ மலம்' நீங்கும்பொருட்டு, அவ்வாறு மீளத் தோன்றவேண்டிய கட்டாயம் உண்டாகிவிடுகிறது. இது உயிர்களுக்கு ஆக்கமானது என்பதற்காக 'ஆம்' என்னும் ஆக்கச் சொல்லும் சேர்ந்து வந்தது.

அறியாமை மலமாகிய 'ஆணவ மலத்தால்' மீண்டும் பிறப்பு உண்டாகிறதென்றால், முதலில் ஒடுங்கியது 'எந்த மலத்தால்' என்று தெரிந்துகொள்ள நினைவு தோன்றும். பிறப்பதும் இருப்பதும் இறப்பதுமாகிய பிறவி நிகழ்ச்சிகள் வினைகளால் உண்டாதலால், ஒடுங்குதலும் அவ்வினையினால் ஏற்பட்டதே என்று தெரிகிறது.

ஏன் ஒடுங்கவேண்டும்? தோன்றியது அப்படியே இருப்பதற்கு என்ன? என்று யாரும் கேட்கலாம்; எடுத்துவந்த வினை தீர்ந்துவிட்டால், தோன்றியது ஒடுங்கிவிடுகிறது;

> "வினைப்போகமே ஒருதேகங் கண்டாய்; வினைதான் ஒழிந்தால்
> தினைப்போதளவும் நில்லாது கண்டாய்"

என்றார் பட்டினத்தடிகளும் (பொது, 7). ஆதலால், ஒடுங்குதல் அவரவர் இருவினை காரணமாக என்று தெரிந்துகொள்ளலாம்.

இங்ஙனம் ஒருவனால் தோற்றப்பட்டு, உள் பொருளேயாம் எனப்பட்ட உலகம், வினைகள் காரணமாகத், தனது முதற் பொருளாகிய மாயையில் ஒடுங்கி, அதற்கு நிமித்த காரணமாய் ஒடுங்கக் கடவுள் இருத்தலின் அவ் ஒடுங்கியிலிருந்தே அறியாமை மலங் காரணமாக மீண்டும் பிறவி உண்டாகும் என்பது இத் தொடரின் கருத்து. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் இத் தொடர் ஒன்றிலேயே குறிப்பாய்ப் பெறப் பட்டன.

இத் தொடரின் கருத்திலும், சிந்தனையாளர் பலர் குறுக் கிடுகின்றனர்.

முதலில் ஒருவனால் உலகம் தோற்றப்பட வேண்டுமானால், அந்த ஒருவன் காட்சியளவைக்குத் தெரியவில்லை என்று 'உலகாயதர்' கூறுவர்.

இவர்க்கு மேல் இன்னும் சிறிது சிந்திப்பவர்களும், காட்சி யளவையையே மிகுதியாகக் கொண்டிருப்பதனால், கண்ணுக்குத் தெரியாத கடவுளை அவர்களால் சிந்திக்க முடியவில்லை. அவர்கள் 'மீமாம்சகர்' எனப்படுகின்றனர்.

உலகாயதரைவிட இம் 'மீமாம்சகர்' சிறிது 'மேலான அம்சம்' உடையவர்கள்; ஆதலால், இவ்வாறு 'மீமாம்சகர்' எனப்பட்டனர். மீ, மேல்; மகரம் ககரம் எழுத்துப் பேறு; 'மீமாம்சையர்' என்றும் சொல்லப்படுவர்.

நூல்கள் பொதுவாக அறிவுநூல்கள் என்றும், உணர்வு நூல்கள் என்றும் இருவகைப்படும். இரண்டையும் உலகாயதர்

ஒப்புக் கொள்வதில்லை. அவர்கள் சிந்தனை, காட்சியளவை யோடு நின்றுவிட்டது. அவர்கள், கருதலில் அவ்வளவாகச் செல்வதில்லை; அதற்குமேல், உரையளவையாகிய நூல்களைப் பற்றி அவர்களுக்கு என்ன அக்கறை! அவர்களைப் போலவே நால்வகைப் புத்தரும், இருவகைச் சமணரும், தகுதியாயிருக் கும் அறிவு நூல் (வேதம்) உணர்வு நூல் (ஆகமம்) இரண்டை யுமே ஒத்துக் கொள்ளாதவர்கள்; கடவுளை எங்கே ஒத்துக் கொள்ளப்போகிறார்கள்?

இவர்கள் ஆறு வகையார்க்கும் நூல் அளவை இல்லாமலு மில்லை; அவரவர்க்குரிய நூல்கள் என்று ஏதோ உண்டு; அவற்றையும் தகுதியாக அறிந்துகொள்வதில்லை. அதனால், இவர்கள் அனைவரும் புறப்பொருள்களையே மிகுதியாய்க் கண்டு அகப்பொருட் போக்கை அவ்வளவாகக் காணாதவர்களாக இருக்கிறார்கள். அதனால் இவர்கள், புறத்திலும் புறமாக எண்ணப்படுகிறார்கள். ‘புறப் புறச் சமயத்தார்’ என்று இவர்கள் கருதப்பட்டனர்.

‘மீமாம்சகர்’ சற்று மேல் சிந்தனை உடையவர்களாய் அறிவு நூலின் தொடக்கக் கருத்தை அவர்கள் போக்கில், ஒப்புக் கொள்கிறார்கள். சிறிது கருதல் அளவை, சிறிது உரை யளவை, உடையவர்கள்!

அறிவு நூலிலும் ஞானத்துக்கு ஏதுவான முடிந்த பகுதி களை இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. செய்கைப் பகுதிகளை மட்டும் ஒப்புக்கொள்வார்கள். செய்கைகளெல்லாம் ஞானத் துக்குத் தாமே ஏதுவாகும் என்னும் நினைவால் இப்படி இவர்கள் சிந்தித்தார்கள்; ஞானத்தோடு இயைந்தனவாகச் செய்கைகளைத் தொடர்புபடுத்திச் செய்தால் பெருமான் உதவி யினால், சிறந்த ஞான நிலை உண்டாகும்.

அறிவு நூல்களை ஓரளவாவது இவர்கள் ஒப்புக் கொள்ளு கிறார்களே, அது சற்று மேல்! இவர்களைப் ‘புறச் சமயத்தார்’ என்று சொல்லுவார்கள். இவர்களைப் போன்றவர்களே தருக் கத்தார், ஏகான்மவாதியர், சாங்கியர், யோகியர், பாஞ்சராத் திரியர் என்பவர்கள்.

இவர்கள் ஆறு வகையாரும் முதற் கடவுளை ஒப்புக் கொள் ளாதவர்கள். அதனால், முதற் கடவுள் ஒருவரால் தோற்றப் பட்டது உலகம் என்பதை இவர்கள் ஒப்புக்கொள்வதில்லை; ‘ஏகான்ம வாதிய’ரும், பாஞ்சராத்திரிய’ரும், பொதுவாகக் கடவுள் ஒருவரை ஒப்புக்கொண்டாலும், கடவுள் இலக்கணத் துக்கு ஏற்றவரையும், முதற் கடவுளையும் ஒப்புவதில்லை.

'திதியே' என்பது, 'உலகம் உள் பொருளே' என்பதைப் புலப்படுத்துவதனுல், இரண்டு கருத்துப் பெறப்படும்.

இப்போது காணப்படும் உலகம் அப்படியே இருப்பதன்று. ஒரு காலத்தில் நிலையின்றி அழிந்துபோகும்; நமது உடம்பும் அப்படித்தான். அழிந்துபோனதை, இல்லாமற் போனதாக எண்ணக்கூடாது. பருமனுக இருந்தது நுட்பமாய் ஒடுங்கி விட்டது என்பதையே, நிலையாமல் அழிந்துவிட்டது என் கிறேம். உடம்பு ஒரு காலத்தில் இறந்து, காணுமற் போவதி லிருந்து இதனைக் காட்சியளவையாலும் தெரிந்து கொள்ள லாம்.

உடம்பும் உலகமும் ஒன்றே யாதலால், இரண்டும் மண், நீர், தீ, காற்று, வானம் என்பவற்ருல் ஆனவை. பருமனுய் இருந்தவை அந்த அந்தப் பொருள்களில் நுட்பமாய் ஒடுங்கிக் கண்ணுக்குத் தெரியாமற் போயின. மண் முதலான ஓரளவு பருமன் பொருள்களும் ஒரு காலத்தில் மிகு நுட்பமான தம் தம் மூலத்தில் ஒடுங்கிவிடும். இப்படியெல்லாம் ஒடுங்கிய பின்பு, இந்த ஒடுக்கப் பொருளை 'மாயை' என்று சொல்லுவார்கள். 'மாய்ந்துள்ளது' என்பது கருத்து. ஆகவே, 'உலகம்' என்பது பருப்பொருள்; 'மாயை' என்பது மிகு நுட்பமாகிய அதன் மூலப் பொருள்; அழிதல் இங்ஙனம் மூலத்தில் ஒடுங்குவதாய் இருப் பதனுல், பருமன் நிலையிலும் அதன் நுட்பநிலையிலும் உலகம் 'உள்பொரு'ளாகவே இருக்கிறது என்று தெரிகிறது;

இல்லாத பொருள் எதுவும் இப்படியெல்லாம் தோன்றியும் இருந்தும் அழிவதும் இல்லை; இது நமக்குத் தெரியும்.

முயலுக்குக் கொம்பு இல்லை; வானத்தில் தாமரைப் பூவும் இல்லை; 'ஒருவன் முயல் கொம்பில் ஏறி, வானத் தாமரையைப் பறித்தான், அந்த மலரை நான் பார்த்தேன்' என்று யாராவது சொன்னுல், அதை நாம் நம்புவோமா? இல்லாத பொருள் எதுவும், அதனுல், தோற்றமுறுவதில்லை. இது, முதற் கருத்து:

இரண்டாவது கருத்து: இந்தப் பொருள்கள் அறியாமைப் பொருள்களாய் இருப்பதனுல், தாமே தோன்றுவதும் தாமே இருப்பதும் தாமே அழிவதும் இல்லை. அறிவுடைய ஒருவன் அசைத்தால் மட்டுமே அறியாமைப் பொருள்கள் அசையும்.

மெய்கண்டார் 'இல்லதற்குத் தோற்ற மின்மையின்' என்றும், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை இன்மை யின்' என்றும் ஏதுக் கூறி, ஒடுங்கின சங்காரத்தின் அல்லது

உற்பத்தி இல்லை' என்று முடிக்கின்றார். இங்கே 'சங்காரம்' என்பது, 'சங்காரக் கடவுளை' உணர்த்தும்.

இதற்கு, மூன்று எடுத்துக்காட்டு வெண்பாக்கள் கூறப்படுகின்றன.

இலயித்த, தன்னில் இலயித்ததாம், மலத்தால்
இலயித்தவாறு உளதா வேண்டும் - இலயித்தது
அத்திதியில் என்னின், அழியாது, அவைபழிவது,
அத்திதியும் ஆதியுமாம், அங்கு.

'தன்னில் (ஒடுக்குங் கடவுளிடத்தில்), ஒடுங்கினவையாகிய உலகத்தொகுதி (இலயித்தவை). இலயித்த வகை எப்படியோ அப்படியே மலத்தால் மீண்டும் தோன்ற வேண்டும். எது எங்கே ஒடுங்குகிறதோ —அங்கிருந்தே அது தோன்றுதலே முறை!

இலயித்தது திதிக் கடவுளில் என்றால், அக் கடவுள் இருக்கும்போது உலகத் தொகுதி (எப்படி அழியமுடியும்?) அழியாது நிலைபெற்றபடியே இருக்கும். உலகத் தொகுதியில் ஒரு சில ஒடுங்குமென்பதின்றி, முழுதும் ஒடுங்குவதென்றால், அப்படி அவை அழிவது, 'அத் திதிக் கடவுளும் படைப்புக் கடவுளுங் கூட அந்த ஒடுங்கும் கடவுளிடத்திலேதான் என்பது பெறப்படும். உலகப் பொருள்களோடு அவரெல்லாம் உடன் ஒடுங்கி விடுவர். வேறு ஒடுங்குமிடம் இல்லை' என்பது, இச் செய்யுளின் கருத்து. நூற்பாவில் 'அவை' என்னுஞ் சொல், 'உலகத் தொகுதி' என்னுங் கருத்தில் ஒருமையில் வந்தாற்போலவே இங்கும் வந்தது; நூற்பாக்களை அருளிச் செய்ததோடு ஏது எடுத்துக் காட்டுகளும் ஆசிரியர் மெய்கண்டாரே கூறினார் என்பது, இப்படிப் பல ஒற்றுமைகள் காணப்படுதலால் தெரிகின்றது.

மேலும் ஒன்று இங்கே நினைக்கவேண்டும்; ஆலம் விதையிலிருந்து அரச மரம் முளைப்பதில்லை; தென்னம் விதையிலிருந்து வாழையுந் தோன்றாது; ஆதலால் ஒடுங்கிய பொருள், மாறி வேறொன்றாய்த் தோன்றுவதில்லை; எது ஒடுங்கியதோ அதுவே மீளத் தோன்றும்; இது, இயற்கையொழுங்கு; அக் கருத்தையும், 'இலயித்தவாறு உளதா வேண்டும்' என்னும் மெய்கண்டார் வாக்கு விளக்கும்.

வித்துண்டா மூலம் முளைத்தவா, தாரகமாம்
அந்தன்தாள் விற்றல், அவர்வினையால், - வித்தகமாம்;

வேட்டுவனும் அப்புழுப்போல், வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே, மண்போல் குளிர்ந்து.

தாள்-சத்தி; ஆற்றல்; திருவருள் என்றபடி; நிற்றல், நிற்றலின்; வேட்டுவன்–வேட்டுவாளி என்னுங் குளவி; கூட்டானே-கூட்டமாட்டானு? கூட்டுவான் என்றபடி; உலகத்தை மீளத் தோற்றுவான்; குளிர்ந்து-அருள்கொண்டு;

மாயை, வினை, ஆணவம் என்னும் மும்மலங்களும் இப் பிரிவிற் பெறப்பட்டன. இவற்றில், 'உலகங்களுக்கும், அவற்றைப் படைக்கும் படைப்புக் கடவுள், நிறுத்தும் திதிக் கடவுள் என்பவர்க்கும், ஒடுங்கும் இடம், முதற் காரணமாகிய மாயையாய் இருக்கவேண்டும்; அப்படியானுல், மாயையிலிருந்தே மீண்டும் உலகம் உண்டாகுமென்று சொல்லாமல், ஒடுக்குங் கடவுளிடத்திலிருந்து உண்டாகும் என்பது எப்படிப் பொருந்தும்?' என்று 'சாங்கியர்' என்னும் சிந்தனையாளர் கேட்கிருர்.

அதற்கு மெய்கண்டார், ஓர் எடுத்துக்காட்டு மூலம் விளக்கம் சொல்லுகிருர். 'விதைகள் முளை எடுப்பதைப் பார்க்கிரும்; முளைக்கு முதற் காரணம் விதைதான்; அந்த முதற் காரணமாகிய விதைக்கு ஆதாரமாய் இருப்பது நிலமும் குளிர்ச்சியும் என்பது எல்லார்க்கும் தெரியும். நிலம் இருந்து அது குளிராவிட்டாலும் விதை முளைக்காது. அதுபோல, உலகத் தோற்றத்துக்கு மாயை முதற் காரணந்தான், ஆனுலும், கடவுளும் அவர் அருளும் உலகத் தோற்றத்துக்கு ஆதாரமாய் இல்லாவிட்டால் உலகமும் உடம்பும் தோன்றுமா?' முதற் கடவுள் நிலம் போன்றது; குளிர்ந்த இயல்பாகிய அருள், அக் கடவுளின் 'சத்தி'! நீரால் நிலம் குளிர்வதைப் போலச் சத்தியால் ஆண்டவன் குளிர்கிருன்; குளிர்ந்து இவற்றைக் கூட்டமாட்டானு! என்று திருப்பிக் கேட்கிருர் மெய்கண்டார்.

'அப்படித் தோன்றுகிறபோதும், அவரவரும் முன் செய்த வினைக்கு ஈடாகவே அவரவர் உடம்புகளும் பொருள்களும் வியக்கத்தக்க வகையாய்த் தோன்றுகின்றன!

அப்படி இல்லாவிட்டால், இறையருள் எல்லார்க்கும் ஒரே வகையாக ஏன் உடம்புகளும் பொருள்களும் கொடுக்கவில்லை என்று கேட்கும்படி நேரும்; அவரவர் வினையால் அமைவன என்ருல், இறை அருளுக்கு ஒரு தொடக்கும் நேராது.

(தொடரும்)

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

(முன் இதழ் உஎஆம் பக்கத் தொடர்ச்சி)

முல்[5]—வளைதற் கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

மறுதாய்=மாற்றுந்தாய்.

மறுநாள்=அடுத்த நாள்.

ம. மறுநாள், தெ. மறுநாடு.

மறுப்ப=ஓர் உவமவுருபு. (தொல். உவம. 1).

மறுபடி=1. திரும்ப. 2. மற்றொரு படி (copy). 3. விடை. (நாஞ்.)

மறுமாடி=மாடிக்கு மேல்மாடி. வீட்டிற்கு மறுமாடி வைத்துக் கட்டியிருக்கிறான்.

மறுமாலை சூடுதல்=கணவனின் அறுபான் விழாவில் நடைபெறும் மாலை மாற்றுச் சடங்கு.

மறு மாற்றம்=மறுமொழி. "மறுமாற்ற மற்றொருவர் கொடுப்பாரின்றி" (பெரியபு. திருஞான. 474).

தெ. மருமாட்ட, க. மருமாத்து.

மறு—மறுவல்=திரும்ப. மறுவலும்=திரும்பவும். "மறுவலும் புல்லிக் கொண்டு" (சீவக. 1052).

மறுவலிடுதல்=1. திரும்புதல். "பின்னை மறுவவிடாதிறே" (ஈடு, 2 : 10 : 8). 2. சிறிது எஞ்சி நிற்றல். "மல்லிகை....... கமழ்தென்றல் மறுவலிடுகையாலே" (ஈடு, 10 : 3 : 5).

மறு—மற்று=(குறிப்பு வினையெச்சம்) 1. மறுபடியும் (W.). 2. பின். 3. வேறு. 4. மற்றப்படி.

(இடைச்சொல்) 1. வினைமாற்றுக் குறிப்பு. 2. பிறிதுப் பொருட் குறிப்பு. 3. அசைநிலை.

"மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை" (தொல். இடை. 14).
"வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே" (நன். 433).

ஒ. நோ: Gk. *meta*, after, occasionally with sense 'change'.

மற்று—மற்ற=பிற, வேறு.

மற்று—மற்றும்=1. மேலும். 2. மீண்டும். "உடைமை மயலாகும் மற்றும் பெயர்த்து" (குறள். 344).

மற்று—மற்றையது=மற்றது.

"மற்றைய தென்பது சுட்டிய தற்இனம்" (நன். 434).

மறு—மாறு. மாறுதல்=(செ. கு. வி.) 1. வேறுபடுதல். "மாறுமனங் கொண்டு" (திருநூற். 47). 2. பின்வாங்குதல். "சூன்மகள் மாறு மறம்பூண் வாழ்க்கை" (பெரும்பாண். 136). 3. குறைதல். நோய் கொஞ்சம் மாறியிருக்கிறது. 4. இடம் வேறுபடுதல். 5. நீங்குதல். "உறக்கம் மாறினன்" (கம்பரா. ஆறுசெ. 7). 6. முதுகிடுதல். "மாறு மைந்தின்" (மலைபடு. 332). 7. கூத்தாடுதல். (பிங்.). 8. இறத்தல். இவ்வான் மாக்கள் மாறிப் பிறந்துவரும். (சி. போ. சிற். 2 : 3, பக். 47). 9. இல்லையாதல். "பரப்பு மாறப் பூத்துக் குளிர்ந்த புனலை" (ஈடு, 2 : 8 : 2). 10. பொய்படுதல். "நாவிற் புனைந்த நன் கவிதை மாறுமை" (பரிபா. 6 : 8).

(செ. குன்றுவி). 1. விற்றல். "நாண்மோர் மாறும்" (பெரும்பாண். 160). 2. பணி செய்தல். "முன்னின பணிமுறை மாற முந்துவார்" (கம்பரா. ஊர்தேடு. 49). 3. பிறனுக்குதவு தல். "பனவனுக்காப் பாமாறியார்க்கு" (குமர. பிர. மீனுட். இரட். 5). 4. கழித்தல். "மாறு மென்மலரும்" (பரிபா. 6 : 46). 5. கைவிடுதல். "புரிபுநீ புறமாறி" (கலித். 15). 6. மறுத்தல். (யாழ்ப்.). 7. எண் பெருக்குதல். "ஐம்பாலும் பொதுவுமான ஆறுனும் மாற நூற்றெட்டாம்" (நன். 269, மயிலை). 8. அடித்தல். (இ. வ.).

க. மாறு.

மாறு=1. வேறுபாடு. "மாறிலாத மாக்கருணை வெள் ளமே" (திருவாச. 5 : 91). 2. எதிர். அவன் எதற்கும் மாறு யிருக்கிறன். 3. பகை. "மாற்றிரு வேந்தர்" (புறநா. 42). 4. ஒவ்வாதது. "மாறல்ல துய்க்க" (குறள். 944). 5. ஒப்பு. "மாறன்மையின்......இளையாரையும் எறியான்" (சீவக. 2261). 6. மாற்றுருப்படி. "மாறுசாத்தி யென்பிழை பொறுப்பீர்" (பெரியபு. அமர்நீதி. 24). 7. எதிர் நன்றி (பிரதியுபகாரம்). "வழக்கொடு மாறுகொளன்று" (திவ். இயற். பெரிய திருவந். 13). 8. மறுமொழி. "மாறெதிர் கூறி மயக்குப்படுகுவாய்" (கலித். 116 : 15). 9. இம்மை நீங்கும் இறப்பு. "நகாஅலென வந்த மாறே" (புறநா. 253). 10. இறப்பின் பின் பிறப்பு. "மாற்றிடைச் சுழலும் நீரார்" (மேருமந். 136). 11. குப்பை கூளம் நீக்கும் துடைப்பம். "சல்லிகளை மாறெடுத்துத் தூர்த்தும்" (பணவிடு. 285). 12. துடைப்பம்போலுதவும் பருத்தித்தூறு. 13. தூறு போன்ற வளாறு. (W.). 14. வளாறு போன்ற பிரம்பு. "மாற்றுலாற்றப் புடையுண்டும்" (சீவக. 2794). 15. மாறுதல் நேரும் வகை. "விளங்கக் கேட்ட மாறு கொல்" (புறநா. 50.)—(இடைச்சொல்).

1. ஏதுப் பொருளிடைச் சொல். "அனையை யாகன் மாறே" (புறநா. 4.). 2. தொறுப் பொருளிடைச் சொல். பகல் மாறு வருகிறான்=பகல்தொறும் வருகிறான்.

மாறு—மாறன்=1. வலிய பாண்டியன். "பூந்தார் மாற" (புறநா. 55). 2. சடத்திற்கு மாறான நம்மாழ்வார். (சடகோபன்). "சடகோபன் மாறன்" (திவ். திருவாய். 2:6:11). 3. மாற்றான். "வல்வினைக் கோர் மாறன்" (திருவரங்கத்தந். காப். 5 .

மாறு—மாறல்=ஏது, காணியம் (முகாந்தரம்). (W).

மாறு—மாற்று=1. வேறுபடுத்துகை. 2. ஒழிக்கை. "மாற்றே மாற்றலிலையே" (பரிபா. 4 : 53). 3. மாற்று மருந்து. 4. பண்டமாற்று. 5. விலை. (யாழ். அக.). 6. மாற்றுடை. 7. மங்கல அமங்கல நாட்களிற் பந்தற்குக் கட்டும் வண்ணான் துணிகள். 8. பொன் வெள்ளி உரைமாற்று. "மாற்றள வற்ற பொன்னுடுத்தாய்" (அட்டப். அழகாந். 2). 9. உரைமாற்று நிறம். (ஈடு, 4 : 3 : 7. ஜீ). 10. எதிர். (யாழ். அக.). 11. ஒப்புமை. "மாற்றிரி யாடிப் பாவையோடு" (ஞானா. 6 : 20). 12. வலிமை. மாற்றாரை "மாற்றழிக்க வல்லானை" (திவ். திருப்பா. 15). 13. ஓரேர் மாடு ஒருநாளில் உழக்கூடிய நிலம். (W.).

மாற்று—மாற்றம்=1. மாறுபட்டநிலை. "மாற்றமாம் வையகத்தின்" (திருவாச. 1 : 81). 2. வஞ்சின மொழி. "மாற்ற மாறான் மறலிய சினத்தன்" (புறநா. 341). 3. பகை. "மாறுகொளுழுவையு மாற்றந் தீர்ந்தவே" (நைடத. கான்புகு. 3). 4. கடிவு. (பரிகாரம்). 5. மாறிச் சொல்லும் விடை. "மறுதலைக் கடாஅ மாற்றமும்" (தொல். மர. 105). 6. சொல். "விடு மாற்றம் வேந்தர்க் குரைப்பான்" (குறள். 689.). "மாற்றம்...... சொல்லே" (நன். 458). 7. பேச்சு. "மாற்ற முரைக்கும் வினை நலம்" (நான்மணி. 45).

தெ. மாட்ட, க. மாத்து, மாத்தனு, பட. மாந்த்.

ஒ. நோ: *It. motto*, word, *F. mot* (mō), word, saying.

முல்—முள்—முண்—முண—முணவு-முணகு—முணங்கு.

முணங்குதல் = 1. உள்வளைதல், உள்ளடங்குதல். 2. அடங்குதல். (W.). 3. குரலையடக்கிப் பேசுதல்.

முணங்கு=1. சோம்பலால் ஏற்படும் உடம்புவளைபு, முடக்கம், சோம்பு. (இலக். அக.). 2. அடக்கம். (சூடா.).

முணங்கு நிமிர்தல்=உடம்பை நீட்டிச் சோம்பல் முறித்தல். "முணங்குநிமிர் வயமான்" (புறநா. 52), "முணங்கு நிமிர்ந் தளைச்செறி யுழுவை யிரைக்கு வந்தன்ன" (புறநா. 78).

முணங்கு—முணக்கு. முணக்குதல்=உள் வளைத்தல். "வள்ளுகிர் முணக்கவும்" (நற். 114).

முரி=வளைவு. முரி—மூரி=சோம்பலால் ஏற்படும் முடக்கம்.

மூரிநிமிர்தல்=உடம்பை நீட்டிச் சோம்பல் முறித்தல்.

முணகு—முனகு. முனகுதல்=குரலையடக்கிப் பேசுதல்.

முனகு—முனங்கு. முனங்குதல்=1. குரலையடக்கிப் பேசுதல். முணுமுணுத்தம். 2. புலம்புதல். 3. முறுமுறுத்தல்.

ஒ. நோ. *OE mōen*, obs. *mean*, *E moan*, to make a long low murmur of physical or mental suffering, to complain, to lament misfortune, to lament for dead person.

முண்—மண்—மாண்=மடங்கு. "பன் மாண்" (பரிபா. 13 : 62).

ஒ. நோ : E. fold=மடி, மடங்கு.

மண்—மணி=(வட்ட வடிவான பொருள்கள்) 1. நாழிகை வட்டில். 2. ஒரு நாழிகை நேரம். 3. கோபுர நாழிகை மணி. 4. நாழிமணி. 5. கைம்மணி. 6. பெரு வட்ட மணிப் பலகை (gong). 7. சிறுவட்ட மணிப் பலகை (சேகண்டி). 8. அறுபது நிமைய நேரம் (இக்.). 9. கடிகாரம். (இக்.) மணிக் கூண்டு.

மணி² =(உருண்டை வடிவான பொருள்கள்) 1. கண் மணி. "கருமணியிற் பாவாய்" (குறள். 1123). 2. பொன் மணி. "மணியிரு தலையுஞ் சேர்த்தி" (சீவக. 977). 3. பாசி மணி. 4. கூலமணி. 5. உருத்திராக்கமணி. "மாசிலாத மணிதிகழ் மேனி" (பெரியபு. திருக்கூட்ட. 6). 6. சிறுமணி யரிசி. 7. பெருமணியரிசி. 8. வலையோரத்திற் கட்டிய குண்டு. "இனமணி விளிம்புறக் கோத்து" (திருவாலவா. 22 : 13). 9. மீன்வலை முடிச்சு மணிவலை. 10. நண்டு தேள் முதலியவற்றின் கொடுக்கு மணி.

முள்—முட்டு—முட்டை=1. உருண்டையான பறவை முட்டை. "புலவுநாறு முட்டையை......கிழங்கொடு பெறூஉம்" (புறநா. 176). 2. உலகக் கோளம். "திசைமுகன் செய்த முட்டை கீண்டிலது" (கம்பரா. திருவடி. 66). 3. சாணியுருண்டையை வட்டமாகத் தட்டிக் காயவைத்த வறட்டி. "நெருப்புக்கு முட்டையும்" (அருட்பா, 1, திருவருள். 105). 4. வட்டச் சிறு கறண்டி. "ஒரு முட்டை நெய்" (பதினெ. கோடித். 16).

ம. முட்டை, க. முட்டெ.

முட்டைக் கண், முட்டைக் கண்ணீர், முட்டைக் கத்தரி, முட்டைக் காளான், முட்டைக் கோசு முதலிய காட்டுச் சொற்கள் உருண்டை வடிவான பொருள்களைக் குறிப்பன.

முட்டு—முட்டான் =1. மஞ்சட் கிழங்கு. 2. திருநீறு நீற்று வதற்குரிய சாணவுருண்டை. திருநீற்றிற்கு முட்டான் போடு.

முட்டு—முட்டி = பேய்க் கொம்மட்டி.

முள்—முண்டு=உருண்ட கட்டை. முண்டும் முடிச்சும்.

முண்டு—முண்டான் = மஞ்சட் கிழங்கு.

முண்டு—முண்டை =1. முட்டை. "முண்டை விளைபழம்" (பதிற்றுப். 60 : 6). 2. கருவிழி.

முண்டை—மிண்டை = கருவிழி. "விழித்திருக்க மிண்டையைக் கொள்வான்" (கலித். 108, உரை).

முட்டு—முத்து= உருண்டையான விதை. குருக்கு முத்து. குறுமுத்தம் பழம் = நீளுருண்டை வடிவான மிதுக்கம்பழம்.

முண்—முணம்—முடம் =1. வளைவு. "முடத்தொடு துறந்த வாழா வன்பகடு" (புறநா. 307). 2. வளைந்தது. "முடத்தாழை" (கலித். 136). "அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே" (நன். 35). 3. கை கால் வளைவு. 4. ஆடல் பாடல் முதலியவற்றின் குற்றம். "பண்ணே பாணி தூக்கே முடமே" (சிலப். 3 : 46).

முடம்—முடவன் =1. நொண்டி. "காலான் முடவன்" (தொல். சொல் 73, இளம்பூ.). 2. அருணன். (அக. நி.). காரி. (பிங்.).

முடம்—முடவு. முடவுதல் = நொண்டுதல். (யாழ்ப்.).

முடவாண்டி (முடம் + ஆண்டி) = கொங்க வெள்ளாளர் குலத்திற் பிறக்கும் பிறவிமுடக் குழந்தைகளை எடுத்துவளர்க்கும் இரப்போர் வகையினர்.

முடம்—முடல்—முடலை =1. உருண்டை (பிங்.). 2. முறுக்கு. திருகல் "முடலை விறகின்" (மணி. 16 : 26). 3. முருடு. (திவா.,) 4. கழலை. (அக. நி.). 5. மனவன்மை. "நன்றுணராராய முடலை முழுமக்கள்" (பழ. 25). 6. பெருங்குறடு. (அக. நி.).

முடங் கொன்றுன்—முடக் கொற்றுன் = முடச் சூலையைப் போக்கும் கொடிவகை.

முடம்—முடந்தை =1. முடம். 2. வளைந்தது. "முடந்தை நெல்லின் கழையமல் கழனி" (பதிற்றுப். 32 : 13). 3. விடாய்க் கட்டுநோய். (M. L.).

முடம்—முடங்கு. முடங்குதல் =1. வளைதல். "அடங்கினன் முடங்கி யலம்வந்து" (உத்தரா. வரையெடுத்த. 72).

2. உடம்பை வளைத்துப் படுத்துக் கொள்ளுதல். ''பசியட முடங்கிய பைங்கட் செந்நாய்'' (நற் 103) 3. தங்குதல். ''அறுகாற் பறவை முடங்கிய செஞ்சடை முக்கணனூர்க்கு'' (பதினொ. பொன்வண். 64). 4. சுருங்குதல். ''இடங்குறை வாயிலின் முடங்கியிருந்துழி'' (பதினொ. திருவிடை. மும். 22). 5. கைகால் வழங்காமற் போதல். ''கைகால் முடங்கு பொறியிலி'' (பிரபுலிங். துதி. 1). 6. தடைப்படுதல். வேலை முடங்கி விட்டது. 7. கெடுதல். ''சிறுமை பொருந்திப் பெருமை முடங்கி'' (திருப்பு. 372).

தெ. முடுகு (g), க. முடுகு.

முடங்கு=1. முடக்குச் சூலைநோய். 2. தெருவளைவு. 3. தெருச்சந்து.

முடங்கல்=1. மடங்குகை. (சூடா.). 2. சுருளோலைக் கடிதம் ''மண்ணுடை முடங்கல்'' (சிலப். 13:96) 3. முடக்குச் சூலை. சூடா.) 4. முடத்தாழை. (பிங்.). 5. பணம் முடங்கிக் கிடக்கை. 6. தடைப்படுகை. ''முயலு நோன்பு முடங்க லிலான்'' (சேதுபு. முத்தீர். 6). 7. சிறுமை. ''முடங்கன் மனைலயமே யினிதாயிற்று'' (திருநூற். 30).

முடங்கர்=ஈன்றணிமையில் உண்டாகும் சோர்வு. ''குருளை மூன்றுடனீன்ற முடங்கர் நிழத்த'' (அகநா. 147).

முடங்கி=1. நோயாற் கிடையாய்க் கிடப்ப—வன்—வள். 2. நிலத்தின் மூலை நீட்டம்.

முடங்கு—முடக்கு=1. வளைவு. ''பாடகம் ஒரு கம்பியாய்ப் பல முடக்காலே போக்கும் வரவும் உண்டானாற் போல'' (சீவக. 510, உரை). 2. தெருவின் கோணம். 3. முடக்கு மோதிரம், நெளி, (நெடுநல். 143—4, உரை). 4. மறைந்து அம் பெய்யும் முடக்கறை. (பு. வெ. 5 : 1, கொளு). 5. முடங்கும் நாக்கு. ''அண்ண மூடெழ முடக்கினையழுத்தி'' (தணிகைப்பு. அகத்தியனருள். 280). 6. முடக்கு நோய். 7. தடை. 8. காலத்தாழ்ப்பு. 9. வேலையின்மை.

க. முடுக்கு.

முடக்கு—முடக்கன்=தாழை. (சங். அக.).

முடங்கு—மடங்கு. மடங்குதல்=1. வளைதல். ''படை போன் முடங்கி மடங்கி'' (கலித். 94:9). 2. மடக்குதல் (திவா.). 3. கோணுதல். 4. வளைந்து செல்லுதல். 5. மீளுதல். (பிங்.). 6. சொல் திரும்ப வருதல். 7. திருகுறுதல். 8. நெளிதல். 9. சுருங்குதல். 10. ஒடுங்குதல் 11. குறைதல். ''மடங்கா விளையுள் வயலூர்'' (சிலப். 23:119). 12. கீழ்ப்படுதல்.

"காரொலி மடங்க......களத்தி னூர்த்த பேரொலி" (கம்பரா. நாகபாச. 291) 13. தாழ்தல். 14. செயலறுதல். "உழவினார் கைம்மடங்கின்" (குறள். 1036) 15. சினமடங்குதல். 16. திருத்தப்படுதல். "மண்டம ரின்றொடு மடங்கும்" (கம்பரா. கும்ப. 267). 17. தடையுண்ணுதல். 18. வாயடங்குதல். 19. ஒருவன் சொத்து இன்னொருவன்பாற் சென்றடைதல்.

மடங்கு=மடி, அளவு 'இருமடங்காக வெய்தும்" (சூளா. கல்யா. 165). மடங்கு—மடக்கு மடக்குதல்=1. வளைத்தல். 2. மடித்தல். "வால்விசைத் தெடுத்து வன்றாண் மடக்கி" (கம்பரா. கடறாவு. 17). 3. மடித்து உடுத்துதல். "மடக்கினார் புலியின் றோலை" (தேவா. 955:1). 4. திருப்புதல். செய்யுளில் எழுத்துஞ் சொல்லும் அடுத்தடுத்துத் திரும்பத்திரும்ப வருமா றமைத்தல். 5. மாறிமாறிச் செய்தல். 6. வென்று கீழ்ப்படுத்து தல். 7. வாயடக்குதல். 8. கால்நடைகளை விளைநிலத்தில் உரத்திற்காக இராவேளையில் ஒருசேர அடக்கி வைத்தல். 9. பொருள்களைத் தன்வயப்படுத்துதல். 10. பணிவாக்குதல். 11. தடுத்தல். 12. அழித்தல். "மடக்குவா யுயிரை யென்னு" (கம்பரா. கும்பக. 188).

மடக்கு=1. வளைவு. 2. மூலைமுடுக்கு. 3. திருப்பு. 4. மடிப்பு. 5. மடக்குக் கத்தி. 6. மாறிமாறி வருகை. 7, செய்யுளில் எழுத்து சொல் சீர் முதலியன அடுத்தடுத்து மீண்டும் மீண்டும் பொருள் வேறுபட்டு வருவதாகிய சொல்லணிவகை. 8. தடுப்பு. 9. தடை.

மடக்கு—மடக்கம்=1. வளைவு. 2. வணக்கம். 3. பணிவு. 4. மனவடக்கம். 5. நோய் திரும்புகை.

மடங்கு-மடங்கல்=1. வளைகை. (திவா.) 2. கோணம். 3. தாழை (அக. நி.). 4. முற்றி வளைந்து சாய்ந்த கதிர். 5. முன்னும் பின்னும் திரும்பி நோக்கிச் செல்வதாகச் சொல லப்படும் அரிமா. "மடங்கலிற் சீறி மலைத்தெழுந்தார்" (பு.வெ. 3:24). 6. அடக்கம். 7. ஒடுக்கம். "மைந்துடை யொருவனு மடங்கலுநீ" (பரிபா. 1:44). 8. உயிர்களைக் கவருங் கூற்றுவன் "மடங்கல் போற் சினைஇ" (கலித். 2). 9. உலகொடுங்கும் ஊழிக்காலம். "மடங்கற் காலை" (கலித். 120). 10. உலகழிக்கும் வடவைத்தீ. "மடங்கல் வண்ணங் கொண்ட கடுந்திறல்" (பதிற்றுப். 62.8). 11. ஊழி முடிவு.

முண்டு—மண்டு—மண்டி=காலை முடக்கி முழங்காலால் நிற்கை. "ஒருகால் மண்டியாக .....மடித்துவைத்து" (புறநா. 80, உரை). மண்டி போடுதல், மண்டியிடுதல் என்னும் வழக்குகளை நோக்குக.

முட்டு—மட்டு—மட்டி.

மட்டித்தல்=(செ. கு. வி.) மண்டலித்தல், வட்டமாதல்—(செ. குன்றுவி.) வட்டமாக்குதல். "திரடோள்கண் மட்டித்தாட" (தேவா. 12:3).

மண்டு—மண்டலம்=1. வட்டம் (பிங்.), "சுடர் மண்டலம்" (திருநூற். 80). 2. வட்டவடிவம். (திவா.). 3. கதிரவனையுந் திங்களையுஞ் சுற்றித் தோன்றும் கோட்டை (பரிவேடம்). 4. கதிரவன் பரிப்பு (கிராந்தி வீதி). 5. பாம்பின் சுற்று. "மண்டலம் பயிலுரகர்" (பாரத. குருகுல. 3). 6. வட்டவடிவான அல்லது சக்கரவடிவான படையமைப்பு. (குறள். 767, உரை). 7. நாட்டின் பெரும்பகுதி. "சோழமண்டல மீதே" (திருப்பு. 94). 8. வானவெளிப் பகுதி. முகில் மண்டலம். 9. நாட்டின் சிறுபகுதி, ஊர். (பிங்.). 10. மந்திரச் சக்கரம். 11. மண்டில நிலை. (பிங்.). 12. நாற்பது அல்லது நாற்பத்தைந்து நாள் கொண்ட மருத்துவக் காலவட்டம். 13. குதிரைச் செலவு வகை. "பண்ணிய வீதி பற்றி மண்டலம் பயிற்றினானே" (சீவக. 795). 14. நடுவிரல் நுனியும் பெருவிரல் நுனியுங்கூடி வளைந்திருக்க, மற்ற விரல்களும் ஒக்க வளைந்து நிற்கும் இணையாவிணைக்கை. (சிலப். 3,18, உரை). 15. வில்லோர் நிலையுளொன்று. (சூடா.). 16. மேலுலகம், பரமண்டலம்.

மண்டலம்—வ. மண்டல.

மண்டலம்—மண்டலி. மண்டலித்தல்—1. வளைத்தல். 2. பாம்பு முதலியன வட்டமாகச் சுற்றியிருத்தல். 3. வில்லாளி காலை வளைத்து வட்டமாக்குதல். 4. இறுதியடியின் அல்லது இறுதிப் பாட்டின் இறுதி எழுத்து அசை சீர் என்பவற்றுள் ஒன்று, முதலடியின் அல்லது முதற்பாட்டின் முதல் எழுத்து அசை சீர் என்பவற்றுள் ஒன்றாய் வருமாறு, செய்யுளிசைத்தல்.

மண்டலி—மடலி மடலித்தல்=மடங்கித் திரும்புதல். (யாழ். அக.)

மண்டலம்—மண்டிலம்=1. வட்டம். 2. வட்ட வடிவம். 3. வட்டக் கண்ணாடி. "மையறு மண்டிலம் போலக் காட்ட" (மணி. 25 : 137). 4. கதிரவன். "பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு" (பெரும்பாண். 442). 5. திங்கள். "செய்வுறு மண்டிலம்" (கலித். 7). 6 ஞாலம். "கடல் சூழ் மண்டிலம்" (குறுந். 300). 7. கதிரவனையுந் திங்களையுஞ் சுற்றியிடப்படும் கோட்டை. (பிங்.) 8. வட்டமாயோடுகை. "செலவொடு மண்டிலஞ்சென்று" (பு. வெ. 12, வென்றிப். 14.) 9. குதிரைச் செலவு வகை. (நாமதீப. 732). 10. வானவட்டம். (பிங்.) 11. நாட்டின் பெரும்பகுதி. "மண்டிலத் தருமையும்" (தொல்.

அகத். 41.) 12. நாட்டின் சிறு பகுதி, ஊர். (பிங்.) 13. கூத்தின்வகை.

மண்டிலயாப்பு = நாற்சீரடிச் செய்யுள்.

"ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்
குட்டமு நேரடிக் கொட்டின வென்ப." (தொல். செய். 114.)
"மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டும்
செந்தூக் கியல வென்மனார் புலவர்." (ஷை ஷை 116.)

இங்ஙனம் மண்டில யாப்பு தொல்காப்பியத்திலேயே சொல்லப் பட்டிருத்தலையும் "என்மனார் புலவர்" என்னும் முன்னூல் பல வற்றைக் குறிக்குந் தொடரையும் ஊன்றி நோக்குக.

நிலைமண்டில வாசிரியப்பா, அடிமறிமண்டில வாசிரியப்பா என்னும் அகவற்பா வகைகள், தொன்றுதொட்டு வழங்கி வருவன. தமிழ் யாப்பு முறை முற்றும் ஆரியச் சார்பற்றது.

மண்டில மாக்கள் = நாட்டின் பகுதியை ஆளும் அதிகாரிகள்.

பழஞ் சோழநாட்டின் பிரிவான தொண்டை மண்டலமும், பழஞ் சேரநாட்டின் பிரிவான கொங்கு மண்டலமும் போன்ற பல மண்டலங்கள், முதற்காலத்தில் மண்டில மாக்கள் அல்லது மண்டலிகர் என்னும் அதிகாரிகளாலேயே ஆளப்பட்டு வந் திருத்தல் வேண்டும். அவர்கள் அரச குடும்பத்தினராகவோ, உழுவித் துண்ணும் வேளாண் தலைவராகவோ, குறுநில மன்ன ராகவோ, தண்டத் தலைவராகவோ இருந்திருக்கலாம்.

எண்ணூற்றுக்காவத அளவு முழுகிப்போன பழம் பாண்டி நாடான 'செந்தமிழ் வழக்கொடு சிவணிய நிலமும்" பனிமலை வரை பரவியிருந்த பழஞ் சேர சோழ நாடுகளும், இருந்த முது பழங்காலத்தில், முத்தமிழ் வழங்கிய முந்து தமிழகம் எத் துணையோ மண்டலங்களாகப் பகுக்கப்பட்டு மண்டலிகரால் ஆளப்பட்டு வந்திருத்தல் வேண்டும்

பாண்டியன் குடிப்பெயர்களுள் ஒன்றான 'பஞ்சவன்' என்னுஞ் சொல், முதலிரு கழகக்கால அல்லது தலைக் கழகக் காலப் பாண்டியர், துணையரையர் (அல்லது மண்டலிகர்) ஐவரைக் கொண்டு நாடாண்டமையை யுணர்த்தும்.

"பஞ்சவ னிடு கூனும்" என்று 15ஆம் நூற்றாண்டு அருணகிரிநாதர் பாடியதுபோன்றே, 'பழியொடு படராப் பஞ்சவ வாழி" என்று 2ஆம் நூற்றாண்டு இளங்கோவடிகளும் பாடி யிருத்தல் வேண்டும்.

அஞ்சவன் என்னுஞ் சொல்லே, பிற்காலத்தில் வடமொழி யிலும் தென்மொழியிலும் பஞ்சவன் என்று திரிந்ததாகத் தெரி

கின்றது. (கை—ஐ—ஐயது—ஐது—ஐந்து—ஐந்தவன்—ஐஞ்சவன்—அஞ்சவன்—பஞ்சவன்.)

ஒ. நோ: அப்பளம்—தெ. அப்படமு, க. பப்பள—ம. பப்படம்—வ. பர்ப்பட்ட. அப்பளக்கட்டையால் மாவை அப்பளித்தமைப்பது அப்பளம்.

முண்டு, மண்டு, மண்டி, மண்டலம், மண்டலிகன், மண்டலித்தல், மண்டிலம் முதலிய சொற்கள் மேலையாரிய மொழிகளில் இல்லை.

Mandalin (Dim. Mandolinde) என்னும் இத்தாலிய நரப்பிசைக் கருவிப் பெயரும், மண்டலியாழ் என்னும் தென்சொல்லின் திரிபாய் இருத்தல் வேண்டும்.

தமிழின் தென்மை, தொன்மை, முன்மை முதலிய தன்மைகளை நடுநிலையாக ஆராய்ந்தறிந்தவர்க்கு, மேற்கூறியவையெல்லாம் வெள்ளிடை மலையாம்.

முண்டு—முண்டி—முடி. முடிதல்=வளைத்து அல்லது சுற்றிக் கட்டுதல்.

முடித்தல்=1. கூந்தலைக் கட்டுதல். "பாஞ்சாலி கூந்தன் முடிக்க" (திவ். பெரியதி. 6 : 7 : 8.) 2. பூமாலை கொண்டையிற் கட்டி யணிதல். "கைபுனை கண்ணி முடித்தான்" (கலித். 107 : 15).

முடி=1. பறவை பிடிக்குங் கண்ணி (Noose). 2. கட்டு. மொட்டைத் தலைக்கும் முழங்காற்கும் முடிபோடுதல். 3. முடிச்சு (Knot). "கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்" (மதுரைக் 256). 4. உச்சியில் முடிக்கும் மயிர்க்கட்டு வகை. (திவா.) 5. நாற்றுமுடி. "வழிமுடி நடுநரும்" (கல்லா. 46:14)

முடி—முடிச்சு=1. கட்டு. முடிச்சவிழ்த்தல். 2. மயிர்முடி. 3. சிறு மூட்டை. மூட்டை முடிச்சு. 4. உள்நார் சுருண்ட கட்டை. முண்டும் முடிச்சுமாயிருக்கிறது.

முடி—முடிப்பு=கிழி, பண முடிப்பு.

முடி—மடி. மடித்தல்=மடக்குதல். சேலையை மடித்தல்.

மடி=1. மடிப்பு. மடித்த சேலை. 3. மடங்கு. இருமடியாகு பெயர். 4. மடித்த அரையாடைப் பை (Lap). ஆவின்பால் முலை. 5. முடங்கித்தூங்கும் சோம்பல். "மடியென்னும் மாசூர" (குறள். 601). 6. கட்டுக்கிடைச் சரக்கு. மடியரிசி. 7. கட்டுக்கிடைச் சரக்கு வீச்சம். மடி நாற்றம். 8. தூய்மையின்மை. மடியாயிருக்கிறேன்.

மடி—மடிப்பு=1. வளைப்பு. 2. திரைப்பு.

(இக்கட்டுரை முற்றும்!)

கம்பராமாயணத் தொடக்கம்பற்றிய ஓர் ஆராய்ச்சி

[திருச்சி டாக்டர் பேராசிரியர் கு. திருமேனி எம்.ஏ. பி.எச்டி]

வான்மீகி இராமாயணந்தான் ஆதிகாவியம் என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த அறிஞர் பெரு மக்களின் கணிப்பு, கம்பர் தாம் புனைந்த இராம காதையை வட மொழி வான்மீகத்தினின்றும் வாங்கிச் செய்துள்ளார் என்பதே. அவர்கள் கருத்துப்படி வான்மீகி இராமாயணம் மட்டும்தான் கம்பருக்கு அடிப்படைக் கதையையே வழங்கியுள்ளதாக ஆகிறது. ஆனால், உண்மை அது வன்று. வான்மீகர் வரலாறும், அவர் இயற்றிய இராமாயண வரலாறும் வான்மீகி இராமாயணத் திலும் மற்றைய வடமொழி இராமாயணங்களிலும், புராணங் களிலும் மாறுபடுகின்றன. வான்மீகி இராமாயணத்தோடு கம்பராமாயணத்தை ஒத்தும், உறழ்ந்தும் கண்டபோது அவை இரண்டற்கும் உள்ள ஒற்றுமைகளைக் காட்டிலும் வேற்றுமை களே மிகுதியாக உள்ளன. ஒற்றுமை கொண்டு 'வான்மீகத் தினின்றும் வந்தது' எனக் கூறக் கூடுமேல் வேற்றுமை கொண்டு 'வான்மீகத்தினின்றும் வரவில்லை' என்று கூறக் கூடாதா?

வான்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு பாடியதாகக் கம்பர் தம் காவியத்தில் எங்கும் குறிப்பிடவில்லை. அதற்காக அவர் வான்மீகருக்கு நன்றி செலுத்தியுள்ளதாகவும் குறிப்பில்லை. அதற்கு மாறாக வான்மீகருக்கும் முன்னர் வாழ்ந்த பழந்தமிழ்ச் சான்றோர்கள் செய்த பல்வேறு இராமாயணங்களைப் பின்பற்றியே கம்பர் தம் இராமாயணத்தைப் பாடியுள்ளமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

இராமன் சோழ மரபில் வந்துற்ற திருமால் வடிவிலுள்ள பரம்பொருள் என்பதைத் தெளிவாகத் தெரிந்துள்ளார் கம்பர். உலகின் அடிப்படைத் தத்துவங்கள், தெய்வீக வரலாறுகள், முனிவர்களின் வாழ்க்கை வரலாறுகள், அரச பரம்பரையினரின் வழி வழி வந்த செய்திகள் ஆகியன பற்றி விரித்துக் கூறுபவை பதினெண் புராணங்களும் பாரதமும் ஆம். அவற்றில் பாரதம், பாகவத புராணம், கூர்ம புராணம், விஷ்ணு புராணம் போன்றவற்றில் இராமாயணக் கதைகள் உள்ளன. இராமனைப் பற்றியும் அவனது மரபுவழி, வாழ்க்கை நெறிமுறைகளைப்

பற்றியும் தெளிவாக விளக்குகின்றன அப் புராணக் கதைகள். அப் புராணங்களிலுள்ள இராமாயண நிகழ்ச்சிகளை அப்படியே ஒத்துள்ளனவாகக் கம்பராமாயண நிகழ்ச்சிகள் அமைந்துள்ளனவேயன்றி வான்மீகி இராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன போன்றவல்ல; மாறுபட்டுள்ளன. ஆகவே, மேற் கண்ட புராணங்களும், திவ்வியப் பிரபந்தமும் மற்றும் வான் மீகிக்கு முன்பிருந்த தமிழ்ச் சான்றோர் எழுதிய இராமாயணக் கதைகளுமே கம்பருக்கு உதவியிருக்கின்றன என்பது வெளிப் படை. அத்தியாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம், வாசிஷ்ட ராமாயணம், அற்புத ராமாயணம் போன்றவை ஜாம்ப வான், வசிஷ்டர், அகத்தியர் போன்ற முனிவர்களால் எழுதப் பெற்றவை; வான்மீகருக்கும் முந்தியவை. அவற்றின் துணை கொண்டே கம்பர் தம் காவியத்தை இயற்றியுள்ளார்.

சங்க காலப் புலவர்கள், இளங்கோவடிகள், திருத்தக்க தேவர், வைணவ ஆழ்வார்கள் போன்ற ஆய்ந்தவிந்து அடங்கிய சான்றோர்கள் போற்றிப் பராவிய இராமனின் தெய்வீகத் தன்மையை வான்மீகி அலட்சியப்படுத்திவிட்டதால் அவர் களின் கருத்துகளை அடியொற்றிப் பாடி இராமனைத் தெய்வமாக்கி யுள்ளார் தம் இராம காதையில் கம்பர். கடவுள், கடவுட் செயல்கள், முனிவர்கள், அவர்களின் ஆற்றல்கள், மன்னர் தம் வழிமுறை, தத்துவார்த்த விளக்கங்கள் முதலியவற்றை வாரி வழங்கிய இத் தமிழ்க் கருவூலங்களுக்கே கம்பர் கடமைப் பட்டவராகின்றார் என்பது ஒருபுடை.

புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடியே இராமனின் தெய்வீகத் தன்மையைக் குலமுறை கிளத்து படலத்தில் விதந்து கூறியுள்ளார். மாந்தாதா, சிபி, மனு போன்ற சூரியகுல மன்னர்கள் வழிவந்த இக்குவாகு மன்னனின் வழித்தோன்றலே அயோத்தியை ஆண்ட இராமன் என்பதை நிலைநாட்டுகின்றார் கம்பர்.

'ஆரியர்' என்ற ஒரு சொல்லைக் கம்பர் பயன்படுத்தி யுள்ளார் எனினும், அது குறிப்பிட்ட எந்த ஓர் இனத்தையும் குறிப்பிடுவதாகாது; ஏனெனில், அக் காலத்தில் அப்படியொரு சாதிப் பாகுபாடு இல்லை. சான்றோன் அல்லது பேரறிவாளன் என்ற பொருளிலேயே அச் சொல்லைக் கையாண்டுள்ளமை இராமன், இராவணன் ஆகிய இருவருக்குமே அவர்களின் உயர் தனிச் செம்மையைக் காட்டுவதற்காக அச் சொல்லை அடை மொழியாக வைத்துப் பாடியுள்ளமையால் அறியக் கிடக்கின்றது. ஆகவே, கம்பராமாயணம் என்பது இராமனைப் பற்றியும்

அவனது ஆட்சியைப் பற்றியும் மட்டும் எடுத்துரைக்கும் ஒரு கதையாகி விடவில்லை; அஃது ஒரு மிகப் பெரிய காவியம். நாடு, நாட்டிற்கு அழகாயமைந்த ஆறுகள், அந் நாட்டின் மக்கள், கலை, பண்பு, நெறிமுறை வாழ்க்கை ஆகியவற்றை விளக்கும் ஒப்பற்ற தலைவனைக் கொண்ட ஒரு தனிப் பெருங்காவியம் எனலே தகும்.

நீதி, நெறி முறைகளுக்குத் திருக்குறளையும், நாட்டு நடப்பு, காதல், வீரம், வாழ்க்கை முறை, இன்பதுன்ப நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்குச் சங்க இலக்கியங்களையும், பாத்திரப் படைப்புகள், தத்துவக் கருத்துகள், கற்பனை, உவமை, கடவுள், பரம்பொருள் தன்மை ஆகியவற்றை விளக்கச் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, தேவாரம், திவ்வியப் பிரபந்தம் ஆகிய தெய்விக நூல்களையும் துணையாகக் கொண்டே தம் காவியத் தலைவனாய இராமனை உலகின் எல்லா மதத்தினரும் போற்றி வணங்கத்தக்க ஒரே பரம்பொருளாக அமைத்துக் காட்டுகின்றார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

இவ் வாராய்ச்சி உண்மை உணர்த்தற்கேயன்றி ஒரு மொழியை, ஓர் இனத்தை, ஒரு நாட்டை, ஒரு பண்பாட்டை உயர்த்தவோ தாழ்த்தவோ அன்று. புராண இதிகாச இலக்கியங்கள் கூறும் செய்திகளில் நம்பிக்கை வைத்தே இவ் வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிவுடையோரால் விலக்கற் பாலன

வான் வெளியினை மூன்று பொழுதில் மூன்று கூறுய் அளக்கும் பகலவனில் விளங்கா நின்ற முதல்வனே திருமாலெனப்பட்டனனன்றி வேறல்லன். இவ்வாறன்றி மாவலிபால் மூவடிமண் இரந்து கேட்டு அவனை ஏமாற்றிக் கீழும் நடுவும் மேலுமென்னும் மூன்றுலகுந் திருமால் தன்னடியால் அளந்தான் என்னுங் கதையும், அவன் பத்துப் பிறவிக ளெடுத்தான் என்னும் கதையும் இறைவனிலக்கணத்துக்கு ஏலாவாய் அருவருப்புகள் பல நிறைந்திருத்தலின் அவை அறிவுடையோரால் விலக்கற்பாலனவாமென்க.

—மறைமலையடிகள்

(கடவுள் நிலைக்கு மாறுன கொள்கைகள் சைவமாகா. பக். ௪0௧).

பெற்ற மனம்

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம் ஏ., பிஎச்.டி.,

தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

அன்பின் ஆழம் :

ஆழமான கடலைவிட அன்பின் திறத்தை உலகில் காண்கின்றோம். வானினும் உயரமாக அன்பின் உயரத்திற்கு வரம்பு கட்டுவோரும் உண்டு பரந்து விரிந்த உலகினைவிட அன்பின் எல்லை விரிந்து செல்லுதலைக் காண்கின்றோம். அன்பின் இயல்பையே உலகம் காட்டுகின்றது. எங்கு அன்பு இல்லை? யாரிடத்து அன்பு இல்லை? எவ்வுயிரில் அன்பு இல்லை? அளவில் வேண்டுமானால் வேறுபாடுகள் காணப்பெறலாம்; வெளிப்படும் நிலையில் வேண்டுமானால் வேறுபாடுகள் காணப் பெறலாம். அன்பினால் வையகமே வாழ்கின்றது; 'அன்பின் வழியது உயிர்நிலை' என்று தமிழ்மறை கூறுவது புனைந்துரையன்று. அன்பின் ஆழத்தை வார்த்தைகளால் கூறிட முடியாது; ஆனால், இலக்கியம் அன்பினை ஓவியமாக்கி விடுகிறது.

கவிஞனும் நுகர்வோனும் :

இலக்கியம் உணர்ச்சிகளின் விருந்து; கவிஞன் வாழும் உணர்ச்சி உலகத்திற்குப் படிப்போனை — நுகர்வோனை அழைத்துச் சென்று இன்பம் ஊட்டும் உயர்கருவி. இலக்கியப் படைப்பினால் கவிஞன் உலகிற்கு உணர்ச்சிப் பேற்றினை வழங்குகின்றான். அவன் அடைந்த அநுபவமே பாட்டு; நுகர்வோனையும் அங்கு அழைத்துச் சென்று இன்பம் ஊட்டுகின்றான் கவிஞன். அவன் வடிக்கும் கண்ணீரும் கலை வடிவம் பெறும்போது அழியாத இலக்கியமாகின்றது; நுகர்வோன் ஓதி ஓதி இன்புறுமாறு, உணர்ந்து ஒன்றுபடுமாறு அவனது படைப்பு அமைந்து விடுகிறது.

சங்கப் பாடல்கள்—உணர்ச்சி ஓவியங்கள் :

சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் உணர்ச்சி ஓவியம், சங்கப் பாவலன் உலகினை உற்றுக் கண்டவன்; கண்டவற்றைக் கருதிக் கவிதை வடிவமாக அமைத்த எழில் ஓவியன்; எண்ணத்தில் ஊறும் இன்ப துன்ப உணர்வுகளுக்குக் கவின் குடில் சமைத்த ஆற்றலன்; படிப்போர் மனத்திடை நின்று நிலவும் கடவுட் கவிதையன். அவனுடைய உணர்வு நிலைகளைக் கண்டறிய விழைவோன், அவனுடைய படைப்புகளில் கருத்தைச் செலுத்தி

மூழ்க வேண்டும்; மூழ்கினால் அங்கே கைநிறைய முத்துகள் கிடைக்கும். ஆம்; காலத்தால் அழியாத கருத்து முத்துகள்; தமிழ்மக்களின் வாழ்வை எதிர்காலத்திற்கு எடுத்துரைக்கும் உணர்ச்சி முத்துகள்.

குளிர்சுவைச் சுனைகள் :

பெற்ற மனத்தின் ஆழமான உணர்வு நிலைகளைச் சங்கப் பாவலன் வடித்ததுபோல் வேறு யாரும் காட்டியதில்லை. தாய்மை பெற்ற பெண் ஒருத்தியின் இயல்புகளை—அவள் மனத்து அடி நிலையை—அங்குப் பரவிடும் எண்ண அலைகளைத் தம் பாட்டில் கூர்ந்துணர்த்திய புலவர் பலர். அவருள் கயமனார் நம் நெஞ்சிடை நிற்கும் நிலையினர்; தாய் உள்ளத்தைத் தண்ணெனக் காட்டிய தமிழ்ப் பெற்றியர். புலவர்பலரினும் இந் நிலை உரைத்த பெரும் வெற்றியர். மகட்போக்கிய தாயின் கூற்றாக—தன் மகள் களவு ஒழுக்கம் தலைப்பட்டுத் தன் மனத்துக்கு இனியவரோடு மனையறம் பேணச் சென்றபிறகு அவளைக் காணாது கருதிக் கூறும் அவலப் பேச்சாகக் கயமனார் வடித்துள்ள உணர்ச்சி ஓவியங்கள் பல. அவையனைத்தும் கயமனாருடைய கற்பனை ஊற்றுகளே. அவ் வூற்றுகளில் பொங்கி எழுந்து குளிர்சுவைச் சுனைகளாக நிற்பவை அவர்தம் படைப்புகள் என்று கூறுவது புனைவு ஆகாது அச் சுனையுள் ஒன்றினை இங்கு நுகர்ந்து இன்புறலாம்; அது சங்ககாலப் புலமை மலையினை உற்று உணர்ந்து வியத்தற்கு உறுதுணையாம் என்பது இக் கட்டுரையாளன் கருத்து.

தாயின் குரல் :

பொழுது புலர்கின்றது. எழுந்த தாய் மனையிடை மகளைப் படுக்கையிற் காணாது உளம் சோர்கின்றாள். அவள் பழகிய இடங்களைச் சென்று காண்கின்றாள். தன் அன்பு மகள் தன் மணாளனோடு சென்றிருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வருகின்றாள். ஆயினும் அவளுடைய மனத்திற்கு அமைதியில்லை. அன்போடு வளர்த்த அருமருந்தன்ன மகள் தன்னைவிட்டு, தன் குடும்பத்தை விட்டு, தன் ஊரை விட்டுப் பிரிந்து சென்றனளே என்ற நினைவு அவள் உள்ளத்தை உருக்குகின்றது; நெஞ்சு நைகின்றது. அவளது மனப்பித்தினைச் சொல்லோவியம் ஆக்க முற்படுகின்றது கயமனாரது கவிதை உள்ளம். ஆழ்ந்த துயரம் அலையலையாகப் பரவுகின்றது. பதினான்கு வரிகள் வரை அத் துயர அலைகள் வடிவம் பெறுகின்றன. நெடுந்தொகை எனப் பெறும் அகநானூற்றுள்—மூன்றும் தொகுப்பாகிய நித்திலக் கோவை

யில், முந்நூற்று எண்பத்து மூன்றும் பாட்டாக அமைந்துள்ள அருங்கவிதையே அது.

கண்ணீர் விடுகின்ருள் :

தன் வீட்டுத் தோட்டத்தில் சென்று நின்று மகள் நினைவை நெஞ்சில் தேக்குகின்ருள் அந்தத் தாய். அவள் கண்களினின்று பெருகும் கண்ணீர் துயரத்தை ஒருவாறு மாற்றுகின்றது. அந்தத் தோட்டத்தில் தன் சிறு மகளின் செங்கைகள் பட்டு வளர்ந்த செடி கொடிகள் அந்தத் தாயின் கண்களிற் படுகின்றன. குறிப்பாக அந்த வயலைக் கொடி (இக் காலத்துப் பசலை என மருவி வழங்குவது) அந்த அன்னையின் கண் நோக்கில் பதிகின்றது. தன்னுடைய மகளுக்கு அந்த அழகுக் கொடி வளர்ப்பு மகள் போன்றது. பல முறை அந்த வயலைக் கொடிக்கு நீர் ஊற்றி அன்போடு அதனைத் தன் செல்வ மகள் வளர்த்து வந்த காட்சி அந்த அன்னை அறியாத ஒன்று அன்று. அதனை நோக்கும்போது அக் கொடி வாடியிருப்பது பெற்ற மனத்திற்குப் புரிகின்றது. தன்னைப் போன்றே அந்த வயலைக் கொடியும் வாடியுள்ளது என்று கருதுகின்ருள் தாய். ஆனல், தன்னுடைய வாட்டத்திற்கும் அவ் வயலைக் கொடியின் வாட்டத்திற்கும் இடையே ஒரு வேற்றுமை இருப்பது அவள் உணராதது அன்று. தன்னை அன்போடு போற்றிப் பேணிய இளஞ்சிறு தாயை இழந்த வருத்தம் அக் கொடிக்கு. தான் அன்போடு போற்றிப் பேணிய இளஞ்சிறு மகளை இழந்த வருத்தம் தனக்கு. ஆயினும் வருத்தம் ஒன்றே. அது மகள் பிரிந்ததால் வந்ததே.

"வாடினை வாழியோ வயலை !"

என்ற சொற்கள் தாயின் இதழ்களினின்று குமுறிக்கொண்டு புறப்படுகின்றன. வாடிய நிலைகண்டு வருத்த முற்ருளேனும், அதனை வாடவிடாது மகள் விரைவில் வந்து விடுவாள்; மீண்டும் நீர் ஊற்றி அன்புகாட்டி வாழ்விப்பாள்; அதனல் வயலைக் கொடிக்குத் தழைத்துச் செழிக்கும் புதுவாழ்வு உண்டு என்னும் குறிப்பினளாய், 'வாழியோ' என்று தொடக்கத்திலேயே உரைக்கின்ருள் அந்த அன்னை. தனக்காகவேனும் வாராது போயினளாயினும், தான் வளர்த்த வயலைக் கொடிக்காகவேனும் தன் அன்புமகள் வந்துவிடுவாள் என்ற ஆழ்ந்த நம்பிக்கை "வாழியோ" என்ற சொல்லில் சுடர் விடுவதை நாம் உணர்கின்ருேம்.

வயலைக் கொடிக்குத் தன் மகள் நீர் ஊற்றிக் காத்த காட்சி படம்போல அன்னையின் மனத்தில் விரிகின்றது. ஆம்; அஃது

ஒரு மறக்க வியலாக் காட்சி ஒவ்வொருநாளும் மறவாது காலைப் போதில், கொல்லைப்புறத்தில் இறைக்கப்பட்டு மூங்கிற்குழாய் வழியே விழும் நீரைப் பெரிய சால் நிறைய எடுத்துக்கொண்டு வருவாள் தன் மகள். ''பல கிளைகளாகிய கொம்புகள் சுமை தாங்காமல் சுழலும்படி அழகிய புதுப்புதுத் தளிர்களைத்தோற்று விக்கும் உன்னை அன்போடு நோக்கி மகிழ்வாள் என் மகள். அவள் தண்ணீர் கொண்டு வரும்போது அன்புடன் விரைந்து ஓடி வருவாள். தன் அன்புக் குழந்தை மனமகிழ உணவு ஊட்ட விரைந்து வரும் ஒரு தாயைப்போல வருவாள் அவள். அழகுக் கைகளிலே அணிந்த சிறந்த வளையல்கள் அசையவும், காலில் அணிந்த சிலம்புகள் 'கலீர்' 'கலீர்' என்று ஒலிக்கவும் ஓடிவந்து நீர் ஊற்றுவாள். நின்னை அவள் நோக்கும்போது, அவள் நோக்கில் ஓர் அன்புத் தாயின் கனிந்த நோக்கமே குடிகொண் டிருக்கும். அவ்வாறு உனக்கு நிறைய நீர் உணவு ஊட்டிப் பேணுவோர் இனி யார்?'' என்று கூறுகின்ருள் அன்னை. வயலைக் கொடியின்நிலை தாயை யிழந்த ஒரு சேயை நினைப்பூட்டுகின்றது; அத்தகு சேய் இரங்கத்தக்க தன்ரே?

''அளியை நீயே''

என்ற சொற்கள் வயலைக் கொடிக்கு இரங்குவது போன்று அமைவன ஆயினும், தன்னிலைக்குத் தானே இரங்கும் உணர்ச்சி நலம் உடையவை.

தன்னைப் பிரிந்து சென்ற அன்பு மகள், தன்னுல் வளர்க்கப் பட்ட அந்த வயலைக் கொடியை எவ்வாறு பிரிந்திருக்கக் கூடும் என்று எண்ணிப் பார்க்கின்றது அந்தப் 'பெற்றமனம்'. ஆம்; 'வன்கண்மை' உடையவளாக மாறிவிட்டாள் தன்மகள் என்ற முடிவிற்கு வருகின்றது அந்த மூதாட்டியின் நெஞ்சம். எனினும் அன்பு ஒருபுறம் அணைக்கின்றது.

''சிறு வன்கண்ணி''

என்ற சொற்கள் அந்த மூதாட்டியின் இதழ்களில் இருந்து அவல உணர்வோடு வெடித்துச் சிதறுகின்றன. சொல் கடுமை உடையதாயினும் நெஞ்சு குழைகின்றது. எப்படி? ''தன்னை வளர்த்து எடுத்த என்னையும் நினையாமல், ஊரிலும் சேரியிலும் எழவிருக்கும் பழியுரையையும் கருதாமல், காடும் சோலையும் கடந்து தன் நெஞ்சிற்கு இனித்தவனேடு செல்லத் துணிந்து விட்டாளே என் அன்புமகள்! நாடுகளையும் தேயத்தையும் கடந்த அவளுக்கு அழகு செய்விக்கும் என்னைப் போலவே நீயும் வாடி விட்டாயே!' என்று புலம்புகின்ருள் அந்த அன்னை. வயலைக்

கொடியை நோக்கிக் கூறும் வாய்மொழியே இக் கவிதை முழுதும். தன்னுடைய வருத்தத்தை நேரே கூருமல், தன் மகளால் வளர்க்கப்பட்ட வயலைக் கொடியின் வாட்டத்தைக் கூறுவாள் போலப் பெற்ற மனத்துப் பித்தைக் கூறுவதாக எடுத்துக்கொண்ட அமைப்பே அழகியது.

''அவளைப் போல உன்னை இனி வளர்ப்போர் யார்'' என்று கவிதையைத் தாயின் மொழிகளோடு முடிக்கின்ருர் கயமனர். அந்த மொழிகளில், தன்னுடைய உள்ளத் துன்பம் அத்தனையையும் கொட்டிவிடுகின்ருள் அந்தத் தாய். வயலைக் கொடிக்கு உரைப்பதாகக் கயமனர் கற்பனை செய்துள்ள அவ்வழகிய கவிதையின் வடிவம் இது :

"தற்புரந் தெடுத்த எற்றுறந் துள்ளாள்
ஊரும் சேரியும் ஓராங்கு அலர்எழக்
காடும் காவும் அவனெடு துணிந்து
நாடும் தேயமும் நனிபல இறந்த
சிறுவன் கண்ணிக்கு ஏர்தே றுவர் என
வாடினை வாழியோ, வயலை! நாடொறும்
பல்கிளைக் கொடிக்கொம்பு அலமர மலர்ந்த
அல்குல் தழைக்கூட்டு அங்குழை உதவிய
வினையமை வரல்நீர் விழுத்தொடி தத்தக்
கமஞ்சூற் பெருநிறை தயங்க முகந்துகொண்டு
ஆய்மடக் கண்ணள் தாய்முகம் நோக்கிப்
பெய்சிலம்பு ஒலிப்பப் பெயர்வனள் வைகலும்
ஆரநீர் ஊட்டிப் புரப்போர்
யார்மற்றுப் பெறுகுவை அளியை நீயே"

[ஓராங்கு - ஒரு தன்மையே; அலர் - பழிப்பேச்சு. ஏர் தேறுவர் - அழகு செய்விப்பவர். அலமர - சுழல. குழை - தளிர்கள். தத்த - அசைய. அமை - மூங்கில் (குழாய்). நிறை - சால். நீர்ச்சால் வயிறு புடைத்திருத்தலின் 'கமஞ்சூல் பெரு நிறை' என்று கூறப்பட்டது.]

தாய்மைக் காட்சி :

வயலைக் கொடியை நோக்கிக் கூறுவதுபோல், உள்ளத்துத் துயரத்தை வெளிப்படுத்துவதாக ஒரு தாயின் உள்ளத்தை இதனுள் ஒவியமாக்கியுள்ளார் கயமனர். இதனைப் படிப்போர் உள்ளத்து, வாடிய வயலைக் கொடியுடன் வாடிய ஒரு தாயின் உள்ளமும் புலனுதல் கண்கூடு. தாய்மை இச் சொற்களில் தண்ணிய காட்சி விரித்திருப்பது உணர்வோர்க்கு விருந்தாகும். கயமனரது இப் படைப்பு தமிழ் அகஇலக்கியத்துள் ஒரு சீரிய திறம் வாய்ந்தது. நினைத்தால் உருக்கும் பெற்றியது.

குமரகுருபர அடிகள்

[பேராசிரியர் கோ. வே. பெருமாள், எம்.ஏ., பி.டி.,

ம. தி. தா. இந்துக்கல்லூரி, திருநெல்வேலி—10]

இன்பத் தென்தமிழ் நாட்டையே, 'தென்பாண்டி நாடு' என்பர். இந் நாட்டின் செல்வமாக மதிக்கப் பெறும் சீராறு, 'தண்பொருநை யாறு' ஆகும். இதனைத் 'தாமிர வருணி' என்றும் சாற்றுவர்! இந்த ஆற்றங்கரையே, 'தமிழ் நாகரிகத்தின் உறைவிடமாக – தமிழ்ப் பண்பாட்டின் தொட்டிலாக' முதன் முதலிலே திகழ்ந்தது' என்பர்! இந்தப் 'பொருநை யாற்'றின் பெருமையை உலகிற்கு உணர்த்திய நவமாண்பினர்—இலக்கியப் பெரியார்கள் சிலர் உண்டு! அவர்களிலே, அகத்தியர், நம்மாழ்வார், குமரகுருபரர், சிவஞான முனிவர் ஆகியோரைச்சிறப்பாகக் குறிப்பிடலாம். இங்கே, குமர 'குருபர அடிகளார் அவர்களின் வாழ்க்கைக் குண நலன்கள் சில வற்றை நோக்குவோம்.

குமரகுருபரர் அருளிய சிற்றிலக்கியத் தமிழ்ப் பணிகள் சிந்தைக்கு விருந்து ஊட்டுவன; சிவநெறியின் மெய்ப்பொருள் காட்டுவன. இவர் 'பொருநைக் கரை'க்கும், 'கங்கைக் கரை'க்கும் பாலமாக அமைந்தார்; அற்புத விந்தைகள் பலப்பல ஆற்றினர்; இந்திய ஒருமைப்பாட்டிற்குப் பெருமை தேடித்தந்தார்; திருவருட் பெரு வாழ்வால், குமரி முதல் இமயம் வரை வியப்பிலே ஆழ்த்தினர்; அருள் வள்ளலாகவே விளங்கினர்; தமிழ் நாடு கடந்து வட நாடு சென்று, தமிழர் அல்லாத பிற இந்தியரிடையே செந்தமிழ் மொழியையும் சிவநெறியையும் முந்துறப் பரப்பினர்; அரசர்களையும் அடியவர் ஆக்கும் அருஞ் செயல்கள் பல புரிந்தார்; நாயக்க மன்னர்களையும் மகமதிய வேந்தரையும் தம் நாவன்மையால் தம்வயப்படுத்தினர்; அன்னவர்களிடம் விருதுகள் பல பெற்று, அருள் வேந்தராக மிளிர்ந்தார்; 'எண்ணி எண்ணித் திட்டம்போட்டு எழுதினரோ? எண்ணுமல் எப்படியோ கொட்டினரோ?' என்று நினைக்குமாறு, பைந்தமிழ் இலக்கியங்கள் பதினறு பாடியுள்ளார்; 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தார்! ஆதலின், 'தென்பாண்டி நாட்டின் இலக்கியப் பெரியார்'களிலே, மிகவும் ஏற்றம் பெற்றவராக, 'குமரகுருபரர்' இலங்குகின்றார்! இவரது வாழ்க்கை வரலாற்றை வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளாரும், பெரும் புலவர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனாரும் செய்யுள் வடிவிலே பாடியுள்ளனர்.

குறிப்பு: *13-9-1976 இரவு மணி 8-05 முதல் 8-15 வரை திருநெல்வேலி A.I.R. வானொலியிலே ஒலிபரப்பப் பெற்றது, 'தென்பாண்டி நாட்டு இலக்கியப் பெரியார்கள்' வரிசையிலே குமரகுருபரர்.*

இந்தத் தென்பாண்டி நாட்டின் சீரும் சிறப்பும் 'பொதிய மாமலை'யிலும், அதிலிருந்து புறப்படும் 'தண்பொருநை யாற்றி'லுமே அமைந்துள்ளன என்பர்! தென்றல் காற்றும், தேன்தமிழ்ச் சொல்லும், தெள்ளிய முத்துமே இந்தத் திருநெல்வேலி மாவட்டத்தின் திகழும் செல்வம் - தேர்ந்த சொத்து என்பர்! இந்தச் சீர் ஆற்றின் வடகரையிலே அமைந்துள்ளது. அதன் பெயரே, சீவைகுண்டம்' என்பது.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்னர், இவ்வூரில், 'சண்முக சிகாமணிக் கவிராயர்' என்னும் சிவநெறிச் செந்தமிழ்ச் சான்றோர், 'சிவகாமியம்மை' யாரோடு இல்லறம் நடத்தி வந்தார். இந்த இல்வாழ்க்கையினர்க்குப் பல்லாண்டுகளாக மக்கட்பேறு வாய்க்கவில்லை! ஆதலின் அருந்தவம் ஆற்றினர்; திருச்செந்தூர் முருகனையே வழிபட்டு வேண்டி வந்தனர். செந்தில் முதல்வன் சீரருளால், அன்னவர்க்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது! ஐந்து வயது ஆகியும், அக் குழந்தை வாய் பேசவில்லை! ஊமையோ மூங்கையோ அறிந்திலர்! வருந்தினர்; நொந்தனர்; நோன்பு பல புரிந்தனர்; செந்தூர் சென்று வேலன் விழுப்பேற்றினையே வேண்டித் தவங்கிடந்தனர். ஆ! என்னே வியப்பு!! கோலப்பன் கூர்அருள் கூடியது! பேசாத வாய் பேசியது! முதலில் 'முருகா' என்று உரைத்தது; உடனே பாமாலை தொடுத்தது; அந்த அருங்கவிதையே 'கந்தர்கலி வெண்பா'வாக அமைந்தது! இந் நூலின் அருமையும் பெருமையும் செந்தூர் அன்பர்களுக்குச் செழுமையாகத் தெரியும்! இது, நாடோறும் மனனம் செய்து வழிபடற்கு உரியது :

"எழுத்துமுத லாம்ஐந்(து) இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து)—ஒழுக்கமுடன்
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி, ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின்(று) அருள்."

இவ்வாறு, அந்நூலின் இறுதியிலே, அடிகளார் முத்தப்பனின் முழு அருள் வேண்டி முறையிடுகின்றார். இம் மாண்பு, கற்போர் அனைவர்க்குமே கடவுள வழிபாடாக அமைகின்றது அல்லவா?

இளந் துறவியார் ஆகிய குமரகுருபரர், திருச்செந்தூரில் தெய்வப் பேரருளையும் பேராற்றலையும் பெற்றார். இயல்பாகவே இலக்கிய இலக்கண நூல்களிலே முறையாகப் பயின்ற மூதறிவு பெற்றார்; மெய்ப்பொருட்கல்வி மேவப் பெற்றார்; கலைகள் அனைத்தையும் கசடறக் கற்ற திறமை கைவரப் பெற்றார்! மொத்தத்திலே, தெய்வீக அருட்டிறமை உற்றார் எனலாம்! தாம் பிறந்த 'சீவைகுண்டம்' மீண்டார். அத் திருப்பதியிலே

வைகும் கயிலை நாதர்மீது, 'கயிலைக் கலம்பகம்' பாடினார்; இவர் புகழ் தென் பாண்டி நாடெங்கும் விரைந்து பரவியது! குழந்தை முனிவர் வடபுலம் நோக்கிப் புறப்பட்டார்; பல திருப்பதிகளையும் தொழுதவாறே, வடபாண்டி நாட்டுக்கு வந்தார்.

வைகையாற்றின் கரையிலே வயங்கும் மாமதுரை மூதூர், குமரகுருபரர் உள்ளத்திலே இன்பத்தேன் பாய்ச்சியது! அங்கயற் கண்ணி கோவில் முன்னர் ஒரு திருமடத்தில் தங்கினார்; 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்' பாடினார். அந் நாளிலே, அப் பெருநகரிலே, திருமலை நாயக்க மன்னன் அரசு வீற்றிருந்தான்! அவன் கனவிலே அம்மை தோன்றினாள்! 'குமரகுருபரர்' அருளிய நூலினை. அரசப்பேரவையிலே அரங்கேற்றுமாறு அறிவுறுத்தினாள்! விழித்தெழுந்த மன்னவன் வியந்தான்! அடிகளாரின் பெருமை அறிந்தான், பெருஞ் சிறப்புகள் பல செய்து அந்நூலை அரங்கேற்றம செய்வித்தான். அந் நூலின் வருகைப் பருவத்துள் ஒரு பாடல்:

"தொடுக்குங் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறும்
சுவையே! அகந்தைக் கிழங்கை யகழ்ந்(து)
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்(கு)
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ(கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிர்ஓ வியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழல்கா(டு) ஏந்தும்இள
வஞ்சிக் கொடியே! வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே."

இதில் அமைந்துள்ள செந்தமிழ் இன்பத்தினை என்னென்பது? செவ்விய கற்பனை ஊற்றுக்களைக் காணுங்கள்; அணி நலன்களை அருந்துங்கள்; பொருள் நலத்தினைப் பருகுங்கள்! இதனாலேயே, 'இந்நூல், தமிழ் மொழியில் உள்ள பிள்ளைத் தமிழ் நூற்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டு என்பர்! இத் திருப்பாடலை அரங்கேற்றிய பொழுது, அருச்சகரின் குழந்தை வடிவினளாக வந்து, அரசன் மடிமீது வீற்றிருந்த அங்கயற் கண்ணி, அரசன் கழுத்தை அணி செய்த முத்தாரத்தை எடுத்து, குருபரமுனிவர் கழுத்தில் இட்டு, மறைந்தருளினாள் என்பர்! பின்னர் அடிகளார், 'மதுரைக் கலம்பகம்' பாடி மகிழ்ந்தார்.

திருமலை மன்னன் வேண்டியவாறே, அடிகளார், 'நீதிநெறி விளக்கம்' இயற்றினார். அதன் காப்புச் செய்யுள், நிலையாமையை நினைப்பூட்டி, இறைவனை வழுத்துமாறு மக்களைத் தூண்டுகின்றது! பாருங்கள்!

"நீரில் குமிழி இளமை; நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள்! என்னே
வழுத்தாத(து) எம்பிரான் மன்று"

இந்த அழகிய நீதி நூலுக்குப் பரிசிலாக, இருபதினாயிரம் சிறு பொன் வருவாயுடைய 'அரிய நாயகபுரம்' என்னும் ஊரினை அம் மன்னவன் அடிகட்கு வழங்கினான் என்பர்! மேலும், அடிகளின் பெருமாண்பினை உணர்ந்த திருமலை மன்னன், அடிகளாருக்கு யானை, குதிரை, சிவிகை, குடை, கொடி முதலிய பல விருதுகளைக் கொடுத்தான்; தன் பேரன்பினைப் புலப் படுத்திப் போற்றினான்.

அங்கிருந்து விடைபெற்ற அடிகளார், வழிகளில் உள்ள திருப்பதிகளை வழிபட்டவாறே, அன்பர் குழாத்தோடு 'திருச்சி மாநகர்' வந்தடைந்தார். திருச்சி நாயக்க மன்னவனும், குமர குருபரரின் பெருமைகளைத் தெரிந்து, வரவேற்றுப் போற்றினான். தன்னையே ஈர்த்த 'தருமபுர ஆதீனம்' நண்ணினார். அங்கே தம்பிரான்களால் வரவேற்கப் பெற்றார்; திருமடத்திற்குச் சென்று, ஆதீனத் தலைவரை வணங்கினார். அப்போது, அங்கே நாலாவது பட்டத்து ஆதீனத் தலைவராக, 'அருட்டிரு மாசிலாமணித் தேசிகர்' அவர்களே திகழ்ந்தார்கள்! 'கங்கு கரையற்றுப் பொங்கி வரும் தம் கருத்திற்கு எங்கே தங்கு தடை நேருகின்றதோ, அங்கேயே தன்னை ஆட்கொள்ள வல்ல அறிவாசிரியர் (ஞானகுரு) இருக்கின்றார்' என்ற உண்மையை உணர்ந்திருந்த குமரகுருபரர், 'தருமபுரத் தலைவரே' தமக்கு மெய்யறிவு ஊட்ட வல்லார் என்பதைத் தெரிந்தார்! அவர் திருவடிகளில் வணங்கி வேண்டினார்.

தேசிகர்பால் மெய்யறிவுரை (ஞானோபதேசம்) பெற்றார்; தம் உடல், பொருள், உயிர் மூன்றையுமே அவரிடம் ஒப்படைத்தார்; அவர்மீது, 'பண்டார மும்மணிக் கோவை' பாடினார்!

தருமபுர ஆதீனத் தலைவர், குமரகுருபரர் தம்மிடம் ஒப்ப டைத்த பெரும்பொருட் குவியலைக் குமரகுருபரரிடமே திரும்பக் கொடுத்து, 'இவை கொண்டு காசி சென்று, அங்கே நம் ஒப் பற்ற சித்தாந்தச் செந்நெறியினையும், செந்தமிழ் மொழியினையும் பரப்பும் முறையிலே பல சீரறங்கள் ஆற்றி வருக' எனப் பணித் தார். அவ்வாறே குமரகுருபரர் வடபுலப் பயணம் மேற்கொண் டார்; வழிகளில் அமைந்த திருப்பதிகளை வணங்கியவாறே

சென்று, 'காசிமாநகர்' கண்டார்; 'காசிக் கலம்பகம்' பாடினர். அறங்கள் இயற்றுவதற்கு அடிகளார், காசியிலே இடம் பெற விரும்பினர்; காசி நகர மகமதிய மன்னவனைப் பார்க்க விரும்பினர்; 'இந்துத்தான மொழியே காசி மன்னவரோடு உரையாடுதற்கு உரிய வாயில்' என்பதை உணர்ந்தார்; அம்மொழியிலே வன்மைபெறக் கலைமகள் திருவருளை வேண்டினர்; 'சகல கலாவல்லி மாலை' என்னும் பதிகம் பாடினர்; ஒரு சிங்கத்தின் மேலேறிச் சென்று, காசி வேந்தனைக் கண்டார்! மகமதிய மன்னவன் அடிகளின் திருவருட் பேற்றினையும், மிக்க தவ ஆற்றலினையும், கடலனைய கல்வி நலனையும், ஒழுக்க மாண்பினையும் கண்டு மிகமிக வியந்தான்! இவர் வேண்டியவற்றினும் பன்மடங்கு மிததியாக, நன்கொடை நல்கினன்; பெரும் சிறப்புக்கள் பலசெய்து அடிகளின் தூய அன்பன் ஆனன் என்பர்! அடிகளின் காசிமடத்து வருவாயில் கனிந்ததே, 'திருப்பனந்தாள் திருமடம்!' அடிகளின் இன்னுயிர் ஒரு வைகாசித்தேய்பிறையில் இறைமை உற்றது என்பர்.

கி. பி. 11 ஆம் நூற்றண்டிலே, 'காவிரி நாடு' ஆண்ட இராசேந்திர சோழன் கங்கையாறு வரை படை எடுத்துச் சென்று வென்று, இமயத்திலே புலிக்கொடி நாட்டினன்; 'கங்கை கொண்ட காவலன்' என்று போற்றும் பெருமை ஈட்டினன்! ஆனல், கி. பி. 17 ஆம் நூற்றண்டிலே, 'பொருநை நாடு' பெற்ற குமரகுருபர அடிகளார், 'கங்கை' வரை சென்றார்; தம்மை எதிர்த்த கவிஞர்கள் எல்லோரையும் சொல்லாற்றலால் வென்றார்; காசி மன்னவனையும் தம்மடிப் படுத்தினர்! இந்த உண்மையினை, அடிகளாரே தம் 'சகல கலா வல்லி மாலை'ச் செய்யுள் ஒன்றிலே குறிப்பிடுவதைக் காணலாம்.

"மண்கண்ட வெண்குடைக் கீழாக, மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்;படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பில்,உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகல கலாவல்லியே!"

'கங்கை கொண்ட புலிக்காவலன்' ஆகிய சோழன், இமயத்தில் பொறித்த புலிக்குறி இலச்சினை இன்று நம் கண்களுக்குத் தெரியவில்லை! ஆனல், 'கங்கை கொண்ட கவிக் காவலர்' ஆகிய குமரகுருபரர் காசியில் அமைத்த குமாரசாமி மடமும், அதன் வழியிலே தோன்றிய 'திருப்பனந்தாள் திருமட'மும் இன்றும், அறப்பணிகள் ஆற்றி வருகின்றன! அவை, குமரகுருபரர் அருட்பேராற்றலை இன்றும் முரசறைந்து கொண்டிருக்கின்றன.

குறிப்பு: *குமரகுருபர அடிகள் வரலாற்றையும் அவர் அருளிய நூல்களையும் இந்தியிலும் வடநாட்டுப் பிற மொழியிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கச் செய்து இந்திய நாடெங்கணும் பரவச் செய்வது திருமடத்தின் தனிப்பெருங் கடமையாகும்.*

நன்றியுரைத்தல்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளரும் தமிழுக்கும் சைவத்திற்கும் கடந்த ஐம்பத்தாறு ஆண்டுகளாக அரும்பணியாற்றி வருபவருமான தாமரைச் செல்வர் வ சுப்பையா பிள்ளை அவர்களின் 80 ஆவது பிறந்தநாள் விழா பற்றிய செய்தியைத் தமிழ்ப் பெருமக்களுக்கும் பேரறிஞர்கட்கும் யாங்கள் தெரிவித்திருந்தோம். அதுகண்ட நூற்றுக்கு மேற்பட்ட பேரறிவாளர்கள் தத்தம் அன்பும் அருளும் நிறைந்த வாழ்த்துரைகளை உரைநடையிலும், பாவடிவிலும் எழுதியனுப்பியுள்ளனர். புலவர். தி. நா. அறிவொளி, எம். ஏ. அவர்கள் எண்பது பாடல்கள் பாடி அனுப்பியுள்ளார். இவ்வாறு பாமாலையும் சொன்மாலையும் சூட்டிய பெருமக்களுக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆட்சியாளர் அவர்கள் இவ் வாழ்த்துக்களனைத்தையும் கண்ணுற்று மகிழ்ச்சி யடைந்தனர். எனினும் அதைவிட அவர்கட்குத் தமிழ்நாட்டில் தமிழ்நூல் தொண்டுக்கு ஏற்பட்டுள்ள இழிநிலையைக் கண்டு வருத்தமே மேலோங்கியுள்ளது.

'சுப்பையா பிள்ளை அவர்கள் தோன்றியிராவிடில் தமிழ்மொழி இன்றடைந்துள்ள சிறப்பில் ஒரு சிறிதேனும் குறைவாய்த்தான் அடைந்திருக்கும்' என்று கூறுமளவிற்கு அவர்கள் வாழ்நாளிலே 56 ஆண்டுகள் தமிழ்நூல் வெளியீட்டுப் பணிக்காகச் செலவிட்டுள்ளதைப் பலர் பாராட்டியுள்ளனர். ஆம். அவர்கள் தமிழ்மக்களுக்கு நூல்வழியாகச் செய்துள்ள தொண்டு அழியாததுதான்.

பார்ப்பாரும் படிப்பாரும் அற்றுக்கிடந்த பழந்தமிழ்ச் செல்வத்தை யெல்லாம் காலத்திற்கும் கரையானுக்கும் இரையாகாது தடுத்துக் காத்து, மேனாட்டு வெளியீடோ என்று எந்நாட்டினரும் வியந்து போற்றும்வகையில் அழகிய வடிவில் தமிழ் நூல்களைப் படைத்துத் தந்தவர்கள் அவர்கள். ஈராயிரமாண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியம் முதல் எட்டுத்தொகை முதலான சங்க இலக்கியங்கள் ஐம்பெரு ஐஞ்சிறு காப்பியங்கள் வரை அனைத்தையும் அழகுறப் பதிப்பித்ததுடன் அவை என்றும் தட்டாமல் தமிழ்ப் பெருமக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற சிறந்த நோக்கத்துடன் மீண்டும் மீண்டும் பதிப்பித்து வருகிறார்கள். அனைவரும் ஒருசேர வாங்கிப் பாதுகாத்து வைத்தற்கும், பரிசாக வழங்குவதற்கும் ஏற்ற வகையில் அந் நூல்களை அழகிய மரப்பேழையில் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். அது மட்டுமா, அதுபோலவே 'சமய நூல் பேழை' 'பள்ளி மாணவர் நூற் பேழை' களை அமைத்துக் கொடுத்ததுடன்

இடைக்கால, நற்கால இலக்கண இலக்கிய நூல்களைக் கொண்ட பேழையையும் மிக அண்மையில் நமக்கு அளிக்க இருக்கிறார்கள். இருந்தும் என்ன பயன்? இவற்றை வாங்குவாரில்லையே. 300 க்கு மேற்பட்ட கல்லூரிகளும் 3000 பள்ளிகளும், பெரும் செல்வர்களும் பொது நூலகங்களும் நிறைந்துள்ள இந் நாட்டில் இன்னும் 500 பேழைகள் கூட விற்கவில்லையே, என்பதுதான் அவர்கள் பெருவருத்தம்.

"இலக்கியங்களை மட்டுமா பதித்துள்ளார்கள்? தமிழில் அரசியல், விஞ்ஞானம், பொருளியல், சட்டம் இவைபற்றி எழுத முடியுமென்று எவருமே நினைக்காத காலந்தொட்டே எம்போன் றோர் எழுதிய நூல்களை அச்சமின்றியும் ஆர்வத்துடனும் வெளி யிட்டதை எண்ணும்போது நாங்கள் உண்மையிலேயே பெருமைப் படுகிறோம்" என்று மாவட்ட நடுவர் திரு. பு. ரா. பக்கிரிசங்கர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போலச் சமயம், வரலாறு, பண்பாடு, காலத்திற்கேற்ற புதுப்புது அறிவியல், மருத்துவம் போன்ற பலதுறை நூல்களையும் வெளியிட்டுள் ளார்கள். குழந்தைகளுக்கேற்ற நூல்களைக் கழகம் வெளியிட் டுள்ளதைப் போல வேறு எந்த நிறுவனமும் வெளியிடவில்லை என்பது உலகறிந்த உண்மை. இவ்வாறு காலத்திற்கும் கருத் திற்கும் ஏற்ற வகையில் நூல்களை வெளியிட்டும் அவற்றை வாங்குவாரில்லையே என்பதுதான் அவர்கள் தம் பெருங்கவலை. 'கடைவிரித்தோம்! இங்குக் கொள்வாரில்லை' என்ற இராம லிங்க அடிகளாரின் நிலை இன்று கழக ஆட்சியாளருக்கு ஏற்பட் டுள்ளது.

பள்ளி கல்லூரி நூலகங்களை நம்பிப் பதிப்பகத்தை நடத்தும் நிலை இன்று இல்லை. கல்லூரிகள் மிகுதியாகப் பிற துறை நூல்களை வாங்கி ஓரளவு தமிழ் நூல்களை வாங்குகின்றன. பள்ளிகளிலும் மாணவர்களுக்குப் பயன்படுமாறு புதியபுதிய தமிழ் நூல்களை வாங்கி நூலகங்களில் சேர்த்தல் வேண்டும். அரசின் கல்வித்துறை பள்ளி நூலகத் துறைக்காக மிகுதியாகப் பண வுதவி செய்தல் வேண்டும். பள்ளிகளிலே மாணவர்கள் பொது நூல்களைப் படிக்கும் பழக்கத்தை மிகுதியாக மேற்கொண்டால் தான் கல்லூரிகளிலும் அப் பழக்கம் வளரும். அரசு 3000 பள்ளிகளில் ஒரு நூறு பள்ளிகளை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றுக்கும் பள்ளி ஒன்றுக்கு நூறு ரூபாய் அளவிற்கு ஆண்டு தோறும் புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பதோடு அமைந்து விடு கிறது.

நூலகநிலை இவ்வாறிருக்க மாணவர்களிடம் படிக்கும் பழக்கம் இல்லாதுபோனது பெருங்குறையாக உள்ளது.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் பாடப் புத்தகங்களைத் தவிரப் பொதுஅறிவைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் பலதுறை நூல்களைப் படிப்பதில்லை. அங்ஙனம் பள்ளி நூல்களையாவது ஒழுங்காகப் பயில்கின்றார்களா எனின் அதுதானும் இல்லை. 'கடைச்சரக்காக'க் கிடைக்கும் உரை, வினாவிடை நூல்களைப் படித்துப் பட்டமும் பெற்றுவிடுகிறார்கள். பாடநூல்களையே பாராது பட்டம் பெற்றோர்கள் இந்தப் பாரினில் மிகுபேருண்டு. நாட்டின் நல்ல எதிர்காலத்திற்கு இது உகந்ததா என்று படித்த மக்கள்தாம் சிந்திக்க வேண்டும். ஆனால் படித்தவர்களோ அரசியல் சேற்றில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மாணவர்களைப் பற்றியும் அவர்களின் படிப்பைப் பற்றியும் கவலையுறுதற்கே நேரமின்றியிருக்கிறார்கள். நாட்டின் எதிர்காலம் இருள் சூழ்ந்த நிலையில் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

பள்ளி நூலகங்கள்தான் இந்நிலை. பொது நூலகங்கள் நிலை எதுவோ என்று ஆராய்ந்தால் அதன்நிலை இதைவிட மிக இழிவாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் பொது நூலகங்கள் புத்தகங்களை வாங்கவில்லை. அரிசி இல்லாமல் சமைத்தல் இயலாது. ஆனால் நூல்கள் வாங்காமலேயே நூலகங்களை நடத்துகின்றது 'தமிழ் நாட்டு நூலக இயக்கம்'. இது மிகமிக வருந்துதற்குரிய நிலை. பொது நூலகங்கள் செம்மையாக இயங்கவேண்டுமென்பதற்காகவே பொது நூலகத்துறை தனியாக உருவாக்கப்பட்டது. அதன் பின் 'மெல்ல இனிச் சாகும்' நிலையில் இருக்கின்றது. தமிழ் நாட்டு நூலகங்கள் இவ்வாறு இயங்கினால் தமிழ் நூல் வெளியீட்டுப் பணி எவ்வாறு சிறப்பாக நடைபெற முடியும்? பல பதிப்பகத்தார் பதிப்புத்தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில்களில் இறங்கிவிட்டனர். இந்நிலை இனியும் நீடித்துக்கொண்டே போனால் இப்போது உள்ள பதிப்பாளர்களும் விரைவில் 'சோப்புச் சீப்புக் கடை' வைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

பதிப்பகங்களின் நிலையே இதுவாயின் இவற்றை நம்பி வாழும் எழுத்தாளர்களின் நிலை எவ்வாறிருக்கும்? எழுத்தாளர்கள் எழுதிய பல கையெழுத்துப்படிகள் பதிப்பாளர்களின் பேழைகளில் உறங்குகின்றன. பழைய நூல்கள் விற்றால்தானே பதிப்பாளர்கள் புதிய நூல்களை வெளியிடுவர்? புதிய நூல்கள் வெளிவந்தால்தான் எழுத்தாளர்கள் தங்கள் எழுத்துக்கேற்ற ஊதியத்தைப் பெறுவர். அறிவிலும் ஆற்றலிலும் அவர்களைவிடப் பலவழிகளிலும் குறைவுடைய பலர் எளிய வழிகளிலும் வாணிபத்திலும் பெரும் பொருளீட்டுவதைக் காணும்போது எழுத்

தாளர்கள் என்ன எண்ணுவார்கள்? இந்நிலையில் ஏன் எழுத்துப் பணியைத் தொடரவேண்டுமென்றுதானே அவர்கள் எண்ணுவர்?

கழக ஆட்சியாளர் அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கிடையிலும் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் சிறந்த இலக்கிய ஏட்டைக கடந்த ஐம்பது ஆண்டுகளாக இடைவிடாது வெளியிட்டு வருவதைப் பலர் பாராட்டியுள்ளனர்.

தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, சமயம், பண்பாடு ஆகியவற்றுக்காக அரும்பாடுபட்டுவரும் 'செல்வி' 50 ஆண்டுகள் கழிந்த பின்னரும் 500 அல்லது 600 படிகளைக்கூடத் தாண்டவில்லையாயின் ஆட்சியாளர் அவர்கள் மனம் எத்துணை துயருறும்? 'புற்றீசல்போலப் பொலபொலவென அன்று தோன்றி அன்றே மறையும் ஒரு சில இதழ்கள் ஐந்து நூறாயிரமும் இரு நூறாயிரமும் விற்கும்போது ஆக்கப்பணியான இலக்கியப்பணியில் ஈடுபட்டுள்ள இவ்விதழுக்கு இந்த நிலையா? முன்னிருந்த ஆட்சி 'சீரணி' அலுவலகங்களுக்காக 400 படிகள் வாங்கிக்கொண்டிருந்தது. ஆட்சி மாற்றத்தினால் அது நிறுத்தப்பட்டது. இன்று ஏறத்தாழப் பத்தாயிரம் தமிழாசிரியர்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பணியாற்றிக்கொண்டு வருகின்றனர். ஆளுக்கு ஒருபடி வாங்கினால் கூடப் போதுமே? அவர்களால் வாங்க இயலாதாயின் தக்க செல்வர்களைக்கொண்டு வாங்கச் செய்யலாமே? கழக ஆட்சியாளர் அவர்கள் தமக்குக் கிடைக்கும் வாழ்த்துரைகளை விட இதைப்போன்ற உதவிகளையே பெரிதும் விரும்புவார்கள்.

இத்தகைய இன்னல்கள் பல சூழ்ந்துள்ள இந்நிலையில் இருந்து வருந்திச் சாவதைவிட இலலாதுபோதல் எவ்வளவு இன்பம் தரும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் பணி மேன்மேலும் சிறக்கவேண்டுமாயின் கழக நூல்கள் விற்பனை பெருக அரசும் நூலகங்களும் அறிஞர்களும் துணை நிற்கவேண்டும். இது விற்காது தேங்கிக்கிடக்கும் நூல்களை விற்பதற்காக விடப்படும் வேண்டுகோளன்று. வெளிவராது காலவெள்ளத்தால் அமுழ்த்தப்பட்டிருக்கும் தமிழ்ச்செல்வங்கள் வெளிவந்து மேன்மேலும் தமிழ் அறிவையும் உணர்வையும் பெருக்குவதற்கேயாம். புதுப்புதுத் துறைகளில் தமிழில் நூல்களைக் கொண்டுவரவேண்டுமென்று பலப்பல திட்டங்களை அவர்கள் உள்ளத்திலேயே தீட்டி வைத்துள்ளார்கள். அவை அனைத்தும் நிறைவேறத் தமிழ்மக்கள் துணை நிற்கவேண்டும். அவ்வாறு துணை நிற்பார்களேயாயின் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள்

"வடமொழிக்குப் பட்டுள்ள வல்லடிமை நீங்கி
மடமொழிக்குந் தண்டமிழ் மன்ன—திடம் விழிக்கு
தாமரைச்செல்வர் தகைமாணுஞ் சுப்பையா
தாமரை நாளுந் தழைத்து"

என்று வாழ்த்தியுள்ளதுபோல் இனியும் பல்லாண்டு பல்லாண்டு தமிழ்ப்பணியாற்றி வாழ்வார்கள். அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவனும் துணைநிற்பானாக.

தவத்திரு. அழகரடிகளார் குறிப்பிட்டுள்ளதுபோல் 'திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் வாழ்க்கை எவ்வளவு நாள் நீண்டு செல்கிறதோ அவ்வளவும் தமிழ்நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும், சைவசமயத்துக்கும் ஆக்கம் தரும்' இது உண்மை.

இரா. கல்யாணசுந்தரம்.
இரா. முத்துக்குமாரசாமி.

எழுத்தாளர் திரு. அகிலனுக்கு 'ஞானபீடம்' பரிசு

தமிழ் எழுத்தாளர்களுள் இன்று தலைசிறந்து விளங்கும் திரு. அகிலன் அவர்களுக்கு இந்தியாவிலேயே எழுத்தாளர்களுக்கென்று வைத்துள்ள மிக உயர்ந்த பரிசான 'ஞானபீடம்' பரிசு இவ்வாண்டு கிடைத்துள்ளது. பரிசுத்தொகை ரூ. ஒரு நூறாயிரம் ஆகும். ஆண்டு தோறும் இந்திய மொழிகளில் வெளியாகும் நூல்களில் சிறந்த ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதற்கு ரூ. நூறாயிரம் பரிசு வழங்கி வருகிறது 'ஞானபீடம்' என்ற இலக்கியப் பண்பாட்டு நிறுவனம். இவ்வாண்டு திரு. அகிலன் அவர்கள் எழுதிய 'சித்திரப்பாவை' என்ற நூலுக்கு அப் பரிசை வழங்கியுள்ளனர், இப் பரிசினைப் பெற்ற முதல் தமிழ் நூலாசிரியர் திரு. அகிலன் அவர்களே யாவர்.

திரு. அகிலன் அவர்கள் அனைத்திந்திய வானொலியில் பேச்சுத்துறை அமைப்பாளராகப் பணியாற்றி வருகிறார். 54 அகவையினரான இவர் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் 40 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

இவர் இதற்கு முன்னரே பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ளார். நாராயணசாமி ஐயர் பரிசு, தமிழக, இந்திய அரசுப் பரிசுகள், சாகித்ய அகாதெமி விருது, இராசா. சர். அண்ணாமலைச் செட்டியார் பெயரில் அமைந்துள்ள ரூ. 10,000 பரிசு போன்ற பலவற்றைப் பெற்றவர்.

இவருடைய புதினங்களில் மிகச் சிறந்த புதினமாக எல்லோராலும் போற்றப் பெறுவது 'பாவை விளக்கு' ஆகும். இது திரைப்படமாகவும் உருவாகியது.

இவருடைய புதினங்களில் சில, வேறு சில இந்திய மொழிகளிலும் ஆங்கிலம், செர்மனி, ருசியம், பிரெஞ்சு, செக் முதலிய வெளிநாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பெற்றுள்ளன.

இவர் தம் நூல்களை ஆய்வதற்கு டாக்டர். மு. வ. அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக மூன்றுநாள் கருத்தரங்கை நடத்தியது குறிப்பிடத் தக்கது.

இலக்கியத் திறனாய்வாளர்
ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் பிரிவு

நாற்பதாண்டுகட்கு மேலாக நல்ல தமிழ்ப் பணியாற்றி வந்த நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த திரு. ஏ. வி. சுப்பிரமணிய ஐயரவர்கள் தம் 76ஆம் அகவையில் 16-8-76 அன்று இறையடியுற்றது குறித்து வருந்துகிறோம். ஆங்கில நாளேடான 'இந்து'வின் செய்தியாளராக 49 ஆண்டுகள் பணி புரிந்துள்ள இவர் தமிழ் இலக்கியத்திற்கும் ஆராய்ச்சிக்கும் செய்துள்ள தொண்டுகள் பாராட்டுதற்குரியன.



கோவில் பட்டி வட்டத்தின் அவல் நத்தம் என்னுமூரில் 3—2—1900 இல் தோன்றிய ஐயர், உள்ளூரில் தொடக்கக் கல்வியை முடித்தபின் எட்டையபுரத்தில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியைப் பெற்றார். நெல்லை ம. தி. தா. இந்துக் கல்லூரியில் பட்டப் படிப்பு பயின்று கொண்டிருந்தபோது விடுதலைப் போராட்டத்திலீடுபட்டுப் பட்டம் பெறாமலேயே கல்லூரியை விட்டு வெளியேறினார். அன்று முதல் செய்தித்தாள்களுக்குச் செய்திகளைத் திரட்டி அனுப்புவதையே தமது பொழுது போக்காகக் கொண்டார். இந்து, நியூ இந்தியா, காமன்வீல், எவரிமென்ஸ் ரிவியூ போன்ற இதழ்களுக்கு இலக்கிய, அரசியல் கட்டுரைகள் எழுதியனுப்பினார். இவர் 1920 முதல் 49 ஆண்டுகள் தொடர்ந்து 'இந்து' இதழின் செய்தியாளராகப் பணியாற்றினார்.

இவை அனைத்துக்கும் மேலாக "இவர் ஆற்றியுள்ள இலக்கியத் தொண்டே தலையாய தொண்டாகும். 1933இல் முதன் முதலில் தற்காலத் தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஆய்ந்து சிறு நூலொன்று வெளியிட்டார்.

தாம் முதலில் பாரதியைக் கண்டபோது ஏற்பட்ட உணர்வுகளைக் 'கவி பாரதியின் நினைவுகள்' (1969) என்ற கட்டுரையாக வடித்து அத்துடன் ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மும்மொழிகளிலுள்ள நூல்கள் சிலவற்றைப் பற்றிய கட்டுரைகளையும் சேர்த்து வெளியிட்டுள்ள நூல் இவர்தம் மும்மொழிப் புலமையைக் காட்டுகின்றது.

தமிழிலுள்ள சித்தர் நூல்களை ஆய்ந்து அவற்றிலுள்ள தத்துவக் கருத்துக்களைச் சுருக்கமாகத் 'தமிழ்ச் சித்தர்களின் கவிதையும் தத்துவமும்' (The Poetry and Philosophy of Tamil Siddhars) (1957, 1969) என்னும் நூலாக ஆங்கிலத்தில் இயற்றியுள்ளார்.

அவ்வப்போது இவர் தமிழ் அறிஞர்களைப் பற்றியும் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் ஆங்கிலத்தில் நாளிதழ்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே' Tamil Studies first & second series 'Epic poetry and modern mind' ஆகும்.

மறைமலையடிகள் நூல்நிலையம் அமைத்த காட்சிகள்

திருக்குறள் காட்சி

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் தமிழகப் பல்கலைக் கழகங்கள் மூன்றும் ஒருங்கிணைந்து சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் இவ்வாண்டு சூலை 9, 10, 11 ஆகிய மூன்று நாட்களிலும் நடத்திய கருத்தரங்கை யொட்டி அவர்கள் வேண்டுதலுக்கிணங்கத் திருக்குறள் பற்றிய 700க்கு மேற்பட்ட நூல்களை நூலாசிரியர்கள் உருவப்படங்களுடன் மறைமலை யடிகள் நூல் நிலையம் வள்ளுவர் கோட்டத்தில் காட்சியாக அமைத்தது. ஏறத்தாழப் பதினையாயிரம் பேர் குறள் காட்சியைக் கண்டுகளித்தனர். தமிழக ஆளுநர் மாண்பமை மோகன்லால் சுகாதியா அவர்களும் காட்சி யைப் பார்வையிட்டார். அவர்கள் 1968இல் வழங்கிய வாழ்த்துரை அடங்கிய திருவள்ளுவர் மலர் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பிள்ளையார் காட்சி

ஆகஸ்ட்டுத் திங்கள் நடைபெற்ற பிள்ளையார் சதுர்த்தியை முன் னிட்டு மறைமலையடிகள் நூல்நிலையத்தில் பிள்ளையார் பற்றிய பல்வேறு புத்தகங்கள், புகைப்படங்கள் கொண்ட காட்சியை நூலகம் அம் மாதம் 23 முதல் 30ஆம் நாள் வரை அமைத்திருந்தது. பிள்ளையார் பற்றிய நூற்றுக்கு மேற்பட்ட புத்தகங்களும் பிள்ளையாரின் பல்வேறு தோற்றங் களைக் காட்டும் படங்களும் காட்சியில் இடம்பெற்றிருந்தன. பிள்ளையார் சதுர்த்தியன்று நூலகத்திலுள்ள வள்ளலார் திருவருள் மண்டபத்தில் 'பிள்ளையார் விழா' சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. தமிழக அரசு இந்துமத அறநிலைய ஆணையர் உயர்திரு. எம். கே. பாலசுப்பிர மணியம், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமைதாங்கி 'வெற்றிக் கடவுள் பிள்ளை யார்' என்ற சிறுநூலை வெளியிட்டார். 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் பிள்ளையாரின் பெருமை பற்றி உரை நிகழ்த்தினார். திருமதி. ஜானகி சுவாமிநாதன் அவர்கள் இன்னிசை நிகழ்ந்தது.

பாரதி காட்சி

மகாகவி பாரதியாரின் பிறந்த நாளைத் தமிழக அரசுச் செய்தி விளம்பரத் துறையினர் செப்டம்பர் 13 முதல் 19 வரை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். இந்த ஒரு வார விழாவையொட்டிப் 'பாரதியார் காட்சி'யை வள்ளுவர் கோட்டத் தில் அமைத்திருந்தனர். அரசு வேண்டிக்கொண்டதற்கிணங்க மறைமலை யடிகள் நூல்நிலையமும் இக்காட்சியில் பங்கேற்றுக்கொண்டது. பாரதி பாடல்களின் பல்வேறு பதிப்புகள், ஆராய்ச்சி நூல்கள், பாரதியார் வரலாற்று நூல்கள், பாரதி பற்றிய ஆங்கில நூல்கள் முதலிய 150க்கு மேற்பட்டவைகளைக் காட்சியில் அமைத்திருந்தது. நாள்தோறும் நான் காயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

கலைமகள் காட்சி

இம்மாதம் நடைபெற்ற கலைமகள் விழாவையொட்டி மறைமலை யடிகள் நூல் நிலையத்தில் 'சக்தி வழிபாடு' பற்றிய நூற்றுக்கு மேற்பட்ட

புத்தகங்களும் அம்மையின் பல்வேறு தோற்றங்களைக் காட்டும் நூற்றுக்கு மேற்பட்ட படங்களும் செப் 29, 30, அக் 1 ஆகிய மூன்று நாட்களிலும் காட்சியாக அமைக்கப்பெற்றிருந்தன. இக் காட்சியில் திருச்சியிலுள்ள கணேசன் கலைக் கூடத்திலுள்ள தெய்விக உருவங்களைக் கண்ணைக் கவரும் வகையில் வண்ண ஓவியங்களாகத் தீட்டும் ஆற்றல் படைத்த சிறந்த ஓவியர்களான திரு. கந்தசாமி, திரு. டி. சிவானந்தா ஆகியோர் வரைந்த ஓவியங்களின் புகைப்படங்களும் இடம் பெற்றிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அறிஞர் இருவர் பதவி உயர்வு

டாக்டர். கு. நம்பியாரூரன்

மறைத்திரு மறைமலையடிகளாரின் பேரனும் திருவாளர் வை. குஞ்சிதபாதம் பிள்ளை - திரிபுரசுந்தரி அம்மையார் ஆகியோரின் திரு மகனுமான டாக்டர். கு. நம்பியாரூரன், எம்.ஏ., எம். லிட். பி.எச்.டி. (லண்டன்) அவர்கள் லண்டனுக்குச் சென்று 'டாக்டர்' பட்டம் பெற்று மீண்ட பின் அரசுகலைக் கல்லூரிகளில் வரலாற்றுத் துறைப் பேராசிரிய ராகப் பணியாற்றி வந்தார். சென்ற திங்கள் அவர் மதுரைப் பல்கலைக் கலைக்கழக அஞ்சல் வழிப் பாடத்துறையின் வரலாற்றுத் துறை துணைப் பேராசிரியராகப் (Reader) பொறுப்பேற்றுள்ளார்.

திரு. அ. திருமலைமுத்துச்சாமி

நூலக இயல் கலைஞர் திரு. அ. திருமலைமுத்துச்சாமி, எம்.ஏ., எம்.லிப்., எம். லிட்., பி.டி. அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக நூலக இயல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார். அண்மை யில் இவர் மதுரைப் பல்கலைக் கழகத்தின் நூலக இயல் துறையின் துணைப் பேராசிரியராகவும் (Reader) துறைத் தலைவராகவும் பொறுப் பேற்றுள்ளார். அவருக்குச் சென்னை நூலகர்களின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழக நூலகர் திரு. பி. ஏ. மோகன்ராஜ் அவர்களும் மறை மலையடிகள் நூல்நிலைய நூலகர் திரு. இரா. முத்துக் குமாரசாமி அவர் களும் 20—9—76 அன்று சென்னை, மறைமலையடிகள் நூல்நிலையத்தில் பாராட்டு விழா நடத்தினர். பாராட்டு விழாவிற்குப் பேராசிரியர், அ. மு. பரமசிவானந்தம் தலைமை தாங்கினர். பின்னர்த் தேநீர் விருந் தளிக்கப்பெற்றது.

கரு. ராம. பெரி. அருணாசலம் செட்டியார் மணிவிழா

சிறந்த தமிழ்ப் பற்றுளரும் கோரமாண்டல் ப்ரோமாடைரட் தலைமைக் கணக்கரும், சித்தாந்த பண்டிதர் இராமநாத பிள்ளையவர்களின் மாணாக் கருமான கரு. ராம. பெரி. அருணாசலம் செட்டியார் அவர்களின் மணி விழா 6—9—76இல் குழிப்பிறையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது "வெற்றிக்கடவுள் பிள்ளையார்" என்னும் நூல் அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

திரு. அருணாசலம் செட்டியார் A. R. மனோன்மணி அம்மையார் ஆகியோரும் அவர்தம் மக்களும் நீடுழி வாழ இறைவனை வழுத்து கின்றோம்.

செய்திகளும் குறிப்புகளும்

புற்றுநோயைப் போக்கும் தமிழ்நாட்டு மூலிகை

ஆங்கில மருத்துவ முறையில் குருதிப் புற்றுநோயைப் போக்க இதுகாறும் கண்டுபிடிக்கப் படாதிருந்த மருந்தொன்று, தமிழ்நாட்டில் விளையும் 'நித்திய கல்யாணி' என்னும் செடியின் மூலிகையினால் தீர்க்கப் படக்கூடும் என்று இப்போது அறிவியலார் கண்டுபிடித்துள்ளனர். வியட்நாம் நாட்டில் இந்தச் செடியைப் பயன்படுத்திப் புற்றுநோய் கொண்ட ஓர் இளைஞரை மருத்துவர்கள் நலம் பெறச் செய்துள்ளனர். இந்த மூலிகை தமிழ்நாட்டில், நெல்லை, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் வறண்ட பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றது. இச் செடி மிக உயர்ந்த மூலிகைச் செடி என்று அனைத்து நாடுகள் அளவில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

''இந்திய மருந்துச் செடிகள்'' நூல் வெளியீட்டு விழா

இந்தியாவில் உள்ள மருந்துச் செடிகள் பற்றிய நூல் ஒன்றை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ளது. இதில் 350 மூலிகைச் செடிகள் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. இதன் முதல் தொகுதியை 28–9–76இல் புது தில்லியில் குடும்ப நலத்திட்ட அமைச்சர் டாக்டர் கரண்சிங் வெளியிட்டார்.

ஊமையைப் பேசவைக்கும் புது மருத்துவ முறை

வியட்நாமில் மீகாங் படுகைப் பகுதியில் உள்ள டிராவின் மருத்துவ விடுதியில் நரம்புகளில் ஊசி குத்தும் ''அக்கூபங்சர்'' என்னும் மருத்துவத்தின்மூலம் பேசும் சத்தி இழந்த ஊமையர்களைப் பேசும்படி செய்கின்றனர். 50 வயதுள்ள ஒரு பிறவி ஊமை 11 நாள் இம் மருத்துவம் அளிக்கப்பட்டதன் விளைவாகப் பேசும் சக்தியைப் பெற்றிருக்கிறார்

தென்மாநிலங்களில் வட்டார மொழியே ஆட்சி மொழி

''1980ஆம் ஆண்டிலிருந்து தென்மாநிலங்கள் அனைத்திலும் அந்தந்த மாநில மொழிகளே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்கக் கூடாது'' என்று 2—10—76, 3—10—76ஆம் நாள்களில் மைசூரில் நடைபெற்ற தென் மாநிலங்களுக்குரிய ஆட்சிமொழி பற்றிய கருத்தரங்கில் பரிந்துரை செய்யப்பட்டது. கர்நாடக மாநில சட்ட அமைச்சர் சித்த வீரப்பா இக் கருத்தரங்கை முடித்துவைத்தார்.

''சி. எஸ்.—ஒரு கண்ணோட்டம்'' நூல் வெளியீட்டு விழா

ஆனந்த விகடன் மணியன் அவர்கள் எழுதிய 'சி. எஸ்.— ஒரு கண்ணோட்டம்' என்னும் நூல் வெளியீட்டுவிழா, மயிலை நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலில் 11—9—76இல் நடைபெற்றது. மேதகு ஆளுநர் மோகன் லால் சுகாதியா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கி நூலினை வெளியிட்டதோடு, மைய அரசின் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கட்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். கவிஞர் கண்ணதாசன், கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், ப சிதம்பரம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

சமக்கிருதத்தில் காந்தியடிகளின் தன் வரலாறு

திரு. கங்காநாத் என்பவரால் சமக்கிருதத்தில் எழுதப்பட்டு கேந்திர சமக்கிருத வித்தியா பீடத்தினரால் வெளியிடப் பெற்றுள்ள "காந்தியடிகளின் தன் வரலாறு, என்னும் நூலினை 15—9—76இல் அலகாபாத்தில், நடுவண் அரசின் கல்வி அமைச்சர் திரு. தி. பி. யாதேவ்" வெளியிட்டார். இது சமக்கிருதம் மட்டும் அறிந்தவர்க்கே பயன்படும்.

விலங்கியல் பற்றிய 4000 நூல்கள்

தென்கிழக்கு ஆசியாவில் இந்திய விலங்கியல் ஆய்வுத் துறையின் நூலகத்தில்தான் விலங்கியல் தொடர்பான நூல்கள், இதழ்கள் ஆகியன பல்வேறு மொழிகளில் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை 4,000க்கு மேலிருக்குமாம்.

ஆங்கில மொழியைக் கைவிடல் ஆகாது!

"ஆங்கிலத்தைக் கைவிடுவது அறிவுடைமை யாகாது. ஏனெனில் ஏழையின் கல்வி எப்படியிருந்தாலும் பணம் படைத்தவர்கள் தங்கள் பிள்ளைகட்கு ஆங்கிலம் கற்பித்து விடுவார்கள். ஏழைகளின் பிள்ளைகளுக்கு அத்தகைய வாய்ப்பில்லாமையால் ஒவ்வொரு கட்டத்திலும் துன்பப்படுகின்றனர் ஆங்கிலம் இன்றைய உலகில் இன்றியமையாததாகும்"—என்று 30—9—76இல் சான்பிரான்சிஸ்கோவிலிருந்து வெளிவரும் 'சன்' என்னும் ஏட்டின் எழுத்தாளருடன் பேசுகையில் தலைமையமைச்சர் இந்திராகாந்தி குறிப்பிட்டார்.

செளராட்டிர மொழியில் திருக்குறள்

22—9—76இல் சென்னை ஆந்திர மகாசபை மண்டபத்தில் நடைபெற்ற செளராட்டிர இலக்கியக் கருத்தரங்கில் தலைமை தாங்கிப் பேசிய செளராட்டிர இலக்கிய சங்கச் செயலாளர் ஆர். வி. செளவி என்பார், செளராட்டிர மொழியில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் 81ஆம் பிறந்தநாள் விழா

31—8—76இல் புரசைச் சுந்தரர் தமிழ்க் கல்லூரியின் சார்பில் மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் 81ஆவது பிறந்தநாள் விழா கங்காதரசுவரர் கோவில் தெரு, நகராண்மைக் கழகப் பள்ளியில், பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் மு சண்முகம் பிள்ளையவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. செயின் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மு. இராமதாசர் பாராட்டுரை வழங்கினர். மகாவித்துவான் அரியதோர் அன்புரை வழங்கினர். மகாவித்துவான் அவர்கட்கு எமது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

செய்யுள் வடிவில் ருசிய மொழியில் திருக்குறள்

தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருக்குறள் 1964 ஆம் ஆண்டில் ருசிய மொழியில் உரைநடையில் மொழிபெயர்க்கப்பட்டது. இப்போது தமிழறிஞர் திரு பூரணம் சோமசுந்தரம் அவர்கள் உதவியுடன்

திரு. ஏ. இப்ரகிமோவ் என்பவர் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்துள்ளார். 25,000 படிகள் அச்சிடப் பெற்று விரைவில் விற்றுவிட்டனவாம்.

திருக்குறளுக்கு ஓவியர் திரு. ஜி. பாப்லாவில்கி என்பவரால் அழகிய வண்ண விளக்கப் படங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இவரது சிறப்பு மிக்க பணியைப் பாராட்டி நேரு விருது வழங்கப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக் குரியது. இவ் விரண்டு திருக்குறள் மொழி பெயர்ப்பு நூல்களும் மறைமலை யடிகள் நூல் நிலையத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

திருக்குறளைச் செய்யுளில் மொழி பெயர்த்த இருவராலும் ருசிய தமிழ் அகர முதலியும் தமிழ் ருசிய அகர முதலியும் இப்போது உருவாக்கப் பெறுகின்றனவாம்.

காற்றின் தூய்மை கெட்டதால் கல்கத்தா மாணவர்கட்கு நோய்

கல்கத்தா நகரின் போக்குவரத்துகளாலும் ஆலைகளின் புகைகளாலும் கல்கத்தா நகரில் வாழும் மாணவர்களுள் நூற்றுக்கு 50 பேர் மூச்சுப்பை தொடர்பான நோய்களால் தாக்கப்பட்டுள்ளனர் என்று அண்மையில் எடுக்கப்பட்ட ஒரு கணக்கினுல் அறியப்படுகின்றது.

மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா

19—9—76 இல் புதுவைத் தமிழ்க் கழகத்தின் சார்பில் திரு. என். சிவப்பிரகாசம், க. மு. அவர்கள் தலைமையில் அடிகளார் நூற்றாண்டு விழா நடைபெற்றது. டாக்டர். ஔவை து. நடராசன் சிறப்புரை யாற்றினர். மற்றும் அறிஞர்கள் பலர் அடிகளார் மாண்பு பற்றி உரையாற்றினர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியச் சுற்று

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினர் நடத்தும் இலக்கியச் சுற்றின் 2 ஆவது கூட்டம் 16-9-76 இல் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் மு. கோவிந்தசாமி, திரு. வி. க. என்னும் தலைப்பிலும், புலவர் சோம இளவரசு அவர்கள் 'கம்பர்' என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். பேராசிரியர் வெள்ளைவாரணனர் நன்றி கூறினர்.

திருவாசகம் முற்றோதுதல்

நெல்லை சுந்தர ஓதுவா மூர்த்தி திருமுறை மன்றத்தின் சார்பில் திருவாசகம் முற்றோதுதல் விழா 3—10—76 அன்று காலை 9 மணி அளவில் திருநெல்வேலி சந்திப்பு ம. தி. தா. இ. கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

மாணிக்கவாசகப் பெருமான் வழிபாட்டுடன் விழா தொடங்கியது. தருமபுரம் சிவத்திரு பி. சுவாமிநாதன் அவர்கள் திருவாசகம் 656 பாடல்களையும் பண்ணோடு பாடினர்கள். மாலை 6 மணி யளவில் முற்றோதுதல் நிறைவுற, துணைச் செயலர் திரு. ம. சிவசம்பு நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

மதிப்புரை

கள ஆய்வில் சில அனுபவங்கள்

[ஆசிரியர்: சரஸ்வதி வேணுகோபால், மு. இராமசுவாமி. கிடைக்குமிடம்: வெற்றிவேல் பிரசுரம், 4, சப்பாணி கோயில் 2வது சந்து, வடக்கு மாசிவீதி, மதுரை-1. விலை ரூ. 4-00]

இருபது ஆண்டுகட்கு முன்னர்த் தமிழில் பி. எச். டி. பட்டம் பெறுவதென்றால் இருந்த அறைக்குள் இருந்துகொண்டு கையில் கிடைத்த நூல்களின் துணைகொண்டு ஆய்வை முடிக்க முடிந்தது. ஆய்வுக்குத் துணை செய்யும் நூலகப் பணியையே உணராதிருந்த காலம் அது. இன்று ஆய்வாளர்களின் எண்ணிக்கை பெருகப் பெருகத் தலைப்புகளும் பல்வேறு கோணங்களில் அமையலாயின. அறைக்குள் இருந்தால் போதாது, நூலகத்தின் துணையும் வேண்டும். அதற்கு மேல் களப்பணியும் வேண்டும் என்ற நிலைக்கு இன்றைய ஆய்வாளர்கள் ஆளாகியுள்ளனர்.

களப்பணி (field study) என்றால் வயலில் களை எடுக்கும் பணியா என்று இந் நூலாசிரியருள் ஒருவர் முதலில் எண்ணியுள்ளார். ஆய்வில் ஆழ்ந்து தம் பட்டறிவைப் பெற்றவுடன் களப்பணி என்றால் என்ன என்பதை நன்கு புரிந்துகொண்டதுடன் அதனை விளக்கியும் அப் பணியில் தமக்குக் கிடைத்த அனுபவங்களையும் தொகுத்து மிகச் சுவையாக இந் நாலில் எழுதியுள்ளார்.

மக்கள் இலக்கியமான வாய்மொழி இலக்கியத்தைப் பற்றியும் நாட்டுப் பண்பாட்டியலைப் பற்றியும் ஆய்வு செய்வோர்க்கும் களப்பணி இன்றியமையாதது. அப் பணியில் ஒரு துறைதான் விவரம் தொகுத்தல் (data collecting). அத் துறையில் இந் நூலாசிரியர்கள் பெற்ற அனுபவங்கள் நிறைந்தது இந் நூல்.

இந் நூலுள் அனுபவங்கள் கூறப்பட்டிருப்பினும் ஆங்காங்கு களப்பணியின் உத்திகளும் (techniques) சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன. களப்பணியில் ஆண்கள் ஈடுபடுவதே தொல்லை. இந் நூலாசிரியர்களுள் ஒருவர் பெண். அவர்தம் பணியில் என்னென்ன சிக்கல்களைக் கடக்க வேண்டியிருந்தது என்பதை இந் நூலைப் படிப்போர் நன்கு உணரலாம்.

ஆய்வு முறைகளை (research methodology) விளக்கும் நூல்கள் தமிழில் ஒன்றிரண்டே. அதிலும் களப்பணியை விளக்கும் நூல்களுள் இதுவே முதல் நூலாகும். ஆய்வை முடித்த பின் இந் நூலாசிரியர்கள் களப்பணி உத்திகளை மட்டும் அத் துறையில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள பல நூல்களின் துணைகொண்டு தமிழில் வெளியிட வேண்டும். ஆய்வு மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டி இந் நூல்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

பதிவு எண் : M. 4899

கழகப் புதிய வெளியீடுகள்

கல்விக்கடவுள் கலைமகள்

ஆயுதபூசை—கலைமகள் விழா—நவராத்திரி என்றெல்லாம் கொண்டாடப் பெறும் விழாக்களைப்பற்றிய தத்துவங்கள், கல்விக்கடவுளை வழிபடும் முறை—ஆயுதபூசை என்றால் என்ன? விசயதசமி என்றால் என்ன? என்ற விளக்கங்கள் சகலகலாவல்லி மாலை, சரசுவதியந்தாதி, போற்றிப் பாடல்கள் போன்ற வழிபாட்டுக் குரிய பக்திப் பாடல்கள் ஆகியன அடங்கிய அழகிய கையடக்கமான வெளியீடு. காசு 50

நுண்ணுயிர்கள் (Micro organisms)

—டாக்டர் கோ. அரங்கசாமி

தண்ணவேந்தர், வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை.

நுண்ணுயிர்கள் மனித வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளன. அவற்றால் நன்மைகளும் உண்டு, தீமைகளும் உண்டு. இப்படிப்பட்ட நுண்ணுயிர்களின் தோற்றம்—வளர்ச்சி—அவற்றின் வாழ்க்கை முறை இன்னபிற செய்திகளை விளக்கிக் கூறுகின்றது இந்நூல். ரூ. 15 00

ஏற்றம் பெற இருபது நோக்கத் திட்டம் (20 Points Programme)

—மா. பா. குருசாமி, எம்.ஏ., டி.ஜி.டி.

இப்போது நாடெங்கும் பேசப்பட்டு வரும் இருபது அம்சத் திட்டங்கள் யாவை? திரு. சஞ்சை காந்தியின் 5 அம்சத் திட்டங்கள் யாவை? அவை எப்படியெப்படியெல்லாம் செயல் பட்டு வருகின்றன? இத் திட்டங்களை நிறைவேற்ற மக்கள் எப்படியெல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்பனவற்றை விளக்கும் அரிய அரசியல்—பொருளாதார நூல். ரூ. 6 00

தொலை உலகச் செலவு

—டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பி.எசி., பி.டி.

விண்வெளியில் பறந்து சென்று தொலைவிலுள்ள, சந்திரன், செவ்வாய், சுக்கிரன் போன்ற வேறு உலகங்களைக் காணவேண்டும் என்னும் மனிதனின் கனவுகள் எப்படி யெப்படியெல்லாம் வளர்ந்து நனவுகளாக மாறி வருகின்றன என்னும் செய்திகளைக் கூறுகிறது இந்நூல். ரூ. 8 00

வரவு-செலவுத் திட்டம் (Budget)

—மா. பா. குருசாமி, எம்.ஏ., டி.ஜி.டி.

பயனுள்ள பொருளியல் நூல்கள் சிலவற்றை எழுதியுள்ள இந்நூலாசிரியர் 'வரவு-செலவுத் திட்டம்' பற்றியும் எழுதி யுள்ளார். அரசின் வரவு-செலவுத் திட்டங்கள் பற்றியும், அதனால் விளையும் பலன் பற்றியும் எல்லாரும் எளிதில் புரிந்து கொள்ளும்படி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ரூ. 4 00

திருக்குறள் நூற்றெட்டு

பொருள் விளக்கத்துடன் நல்வாழ்வுக்கு நாளும் ஓதவும் மலர் தூவி வழிபடவும், இசையரங்கு நடத்தவும் பயன்படும் சிறந்த நூல். ரூ. 1 25

அப்பர் அச்சகம், சென்னை-1.